கோகுலம்

18-6-1978 விலை 60 காசு





மலர் - 6 இதழ் - 8

ஜூன் 18, 1978

காளயுக்தி - ஆனி 4

கோகுலம்

சந்தா விபரம்:

இந்தியா:

ஒரு வருடம் — ஆறு மாதம்

ரூ. 15-00 — ரூ. 7-50

வெளி நாடுகள்:

ஒரு வருடம் ரூ. 40-00

வாழ்த்துச் செய்தி

கல்கி நிறுவனத்திலிருந்து சிறுவர்களுக்கென்று சிறப்பாக வெளி வந்து கொண்டிருந்த 'கோகுலம்' இதழ் இடையிலே சிறிது காலம் நின்று போயிருந்தாலும் மீண்டும் புது மெருகோடு வெளி வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். வருங்காலச் சமுதாயத்தின் நாற்றுக்களான குழந்தைச் செல்வங்கள் நல்லறிவு பெற்று ஒழுக்கத்தோடு வளர குழந்தைகளுக்கான பத்திரிகைகள் சிறந்த முறையில் சேவை செய்ய முடியும். கோகுலம் இதழ் சிறுவர்களுக்குத் தேவையான நல்ல பல விஷயங்களைத் தாங்கி பயனுள்ள பணி ஆற்ற என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்,

(எம். ஜி. ராமச்சந்திரன்)



நன்றி மறவேல்

நல்வழி

ஒருவர் நமக்கு ஓர் உதவி செய்தால், நாம் அவருக்கு என்றென்றும் உதவியாய் இருப்பதே நன்றி மறவேல் என்பதற்குப் பொருள்.

தாய் தந்தையர்கள் நமக்கு உணவு ஊட்டி வளர்த்து மனிதனாக ஆக்குகிறார்கள். ஆசிரியர் அறிவைப் புகட்டி நம்மை வளர்க்கிறார், கடவுள் உலகிலுள்ள அத்தனை பொருள்களையும் படைக்கச் செய்து—அந்தப் படைத்த பொருள்களையெல்லாம் அனுபவிப்பதற்கு நமக்கு சக்தியும் கொடுத்து, நல்வாழ்க்கையில் நம்மை அழைத்துச் செல்கிறார். ஆகையால் நாமும் நமது தாய் தந்தையரிடமும் ஆசிரியரிடமும் பெரியவர்களிடமும் தெய்வத்திடமும் தொண்டு செய்து—பக்தி பண்ணி நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, கர்ணன் யார் பெற்ற பிள்ளையென்று அடையாளம் தெரியாமல் இருந்தும்கூட துரியோதனன் அந்தப்பிள்ளையை வளர்த்து ஆளாக்கி அரசனாக்கினான். அதற்கு நன்றியாகக் கர்ணன் தன் தாய் தந்தையர் இன்னாரென்று தெரிந்த பிறகு, தன் அண்ணன் தம்பி யாரென்று தெரிந்தும்கூட, மனம் மாறாது தன்னை ஆளாக்கி அரசனாக்கிய துரியோதனனை மறக்காமல் அவனுக்காகத் தொண்டு செய்து உயிரையும் துறந்தான்.

சுக்ரீவன்—விபீஷணன் போன்றவர்கள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்குத் தொண்டு செய்ததின் பிரதிபலனாக, சுக்ரீவனுக்கு ராஜ்யமும், விபீஷணனுக்கு அரச பதவியும் அளித்தார் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி.

சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்தில் நாயன்மார்களின் வரலாறுகளில், இறைவனையே நம்பி, இறைவனுக்கே தொண்டு செய்த நாயன்மார்களுக்கு இறைவனே நேராக வந்து காட்சி அளித்திருக்கிறார்.

பொதுவாக ஒரு மனிதன் பிரதிபலனை எதிர்பார்த்து யாருக்கும் எந்த ஓர் உதவியும் செய்யக்கூடாது. அது தன்னுடைய கடமை— தன்னுடைய தர்மம் என்றே செய்ய வேண்டும். ஆனால், பலனைப் பெறுபவர்கள் செய் நன்றி மறவாமல், பலனை அளித்தவர்களுக்கு நன்றி பாராட்ட வேண்டும்.

இதையேதான் ''செய்நன்றி கொன்ற மகர்க்கு உய்வில்லை'' என்கிறார் வள்ளுவர் பெருமான்.





ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளியது

ஆரம்பம் இங்கே, முடிவு எங்கே...?


''இந்தியாவுக்கு வாணிபம் செய்யக் கடல் மார்க்கமாக வந்தது யார் என்று உங்களுக்குத் தெரியும். 'வாஸ்கோ-ட-காமா' வந்த கப்பலை நீங்கள் பார்த்திருக்க முடியாது. அந்தக் காலத்தில் கப்பல்களில் தான் கடல் வழியாகப் பிரயாணம் செய்து வாணிபம் செய்தார்கள். இதோ 'டகாமா' வர்த்தகக்கப்பல் இது. ஒரு விசேஷம் என்ன தெரியுமா..? கப்பலையும், கடலையும் பாய்மரங்களையும், மேகங்களையும் ஒரே கோட்டினால் வரைந்திருக்கிறார் ஓவியர். அவர் இதை வரைய ஆரம்பித்த இடம் (முனை) கீழே காட்டப்பட்டிருக்கிறது. அவருடைய கோட்டின் மறுமுனை இந்தப் படத்துக்குள் எங்கோ ஓர் இடத்தில் முடிவடைகிறது. அது எங்கே என்று கண்டு பிடிக்க முடியுமா பாருங்கள். அதற்கான வழி உங்கள் பென்சிலைக் கூராக்கிக் கொண்டு ஆரம்ப முனையிலிருந்து அந்தக் கோட்டின் மீதாக (இலேசாக) ஓட விடுங்கள். ஆனால், கையை வலித்தால், கண் பூத்துப் போனால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல!

— வாண்டு.





பாபா சொன்ன பாப்பாக் கதைகள்



அர்ஜுனனுக்கு வில் வித்தையிலும் போர்த் திறனிலும் தன்னையும் மிஞ்சிய சூரன் எவனும் இருக்க முடியாது என்று இறுமாப்பு ஏற்பட்டது.

இதை அவனது அருமை நண்பரான கண்ணன் அறிந்து கொண்டு தமக்குள் சிரித்துக்கொண்டார். அவர் மனத்துக்குள் ஒரு திட்டம் போட்டுக்கொண்டு விட்டார்.

அச்சமயத்தில் அர்ஜுனன் தன்னையறியாமல் ஒரு தப்புச் செய்துவிட்டான். அதற்குப் பிராயச்சித்தமாகத் தேசம் முழுதிலுமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்கும் புனித தீர்த்தங்களுக்கும் அர்ஜுனனைப் போகச் சொல்லி ஒரு யாத்திரைத் திட்டம் போட்டுக்கொடுத்தார் பகவான் கிருஷ்ணர். அதன் உள்ளேயிருந்த ரகசியத்தை அறியாத அர்ஜுனனும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டு புறப்பட்டான்.

தேசத்தின் தென்கோடியில் ராமேச்வரத்திலுள்ள ராமசேதுவுக்கு அர்ஜுனன் வந்து சேர்ந்தான்.

ராமபிரான் இதற்கு முன் யுகத்தில் இலங்கை செல்வதற்காக கடலை அடைத்துப்போட்ட அணைதான் ராமசேது என்பது. அர்ஜுனன் காலத்திலும் அந்த அணை இருந்தது.

சிரஞ்ஜீவியான ஆஞ்ஜநேயர் அந்த அணையின் பக்கத்தில் ஸ்ரீராம நாம ஜபம் செய்து கொண்டிருந்தார்.

அணையைப் பார்த்த அர்ஜுனனுக்குத் தன்னுடைய வில்வித்தைக் கர்வம் பொங்கி வந்தது.

கர்வம் வந்துவிட்டால் அது எல்லா நற்குணங்களையும் அடித்துக் கொண்டு போய்விடுமல்லவா? அர்ஜுனன் சாக்ஷாத் ராமபிரானையே எள்ளி நகையாடி எகத்தாளமாகப் பேச ஆரம்பித்து விட்டான்—அதுவும் குணவந்தரும், பக

வந்தரும், பலவந்தருமான ஹநுமந்தரின் முன்னமேயே!

''நானாக இருந்தால் ராமரைப்போல் பெரிய வானர சைனியத்தின் துணையைப் பெற்றிருக்கவேமாட்டேன். இப்படி அநேகரின் சகாயத்தினால் குன்றுகளையும், பாறைகளையும், மரங்களையும் கொண்டு அணை கட்டியிருக்க மாட்டேன். தனியொருவனாக நான் மாத்திரமே அம்புகளை மழை என விட்டு, அவையே ஒன்றோடொன்று கோத்துக் கொண்டும் பின்னிக் கொண்டும் அற்புதமான அணையாக அமையுமாறு செய்திருப்பேனாக்கும்! மஹா பெரிய வில்லாளி என்று ராமர் பெயர் வாங்கி என்ன பிரயோஜனம்? என் அம்புப் பாலத்தின்மீது யானைப்படை போனாலும் அது துளிக்கூடச் சேதமாகாது. என்றென்றும் உறுதியாக நிற்கும். ராமர் போட்ட சேதுஇப்போதேசேதமடைந்து காண்கிறதே!'' என்றெல்லாம் பேசிக் கொண்டே போனான் அர்ஜுனன்.

ஹநுமார் அவன் மீது சீறவில்லை. அன்போடும் பொறுமையோடும் அடக்கத்தோடும், ''அப்பா! ரொம்பவும் சரி! உன் தநுர் வித்தைத் திறனைப் பார்க்க எனக்கும் மிகமிக ஆசையாக இருக்கிறது. ஆகையால் இப்போதுதான் நீ அம்புப் பாலம் போடேன்! நானும் பார்த்து மகிழ்கிறேன்'' என்றார்.

கண்ணனின் திட்டம் அவருக்குப் புரிந்து விட்டது. அதனால் இப்படிச் சொன்னார்.

அர்ஜுனன் உடனே உற்சாகமாகத் தனது காண்டீபம் என்ற வில்லில் கணைகளைப் பூட்டிவிடலானான். தெய்வீக சக்தி வாய்ந்த அவனது அம்புறுத்தூணியிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் பாணங்கள் வந்து கொண்டேயிருந்தன.

அர்ஜுனன் பாணம் எய்யும் சாமர்த்தியத்தினாலேயே அவை ஒன்றையொன்று பின்னிக்கொண்டு பாதை போல் அமையுமாறு வெகுசீக்கிரத்திலேயே ராமேச்வரத்துக்கும் லங்கைக்குமாகப் பாலம் போட்டு விட்டான்!

''பேஷ், பேஷ்'' என்று அவனைப் பாராட்டிய ஹநுமான், ''எனக்கு லங்கை சென்று அங்கே இன்னமும் ஆட்சி செய்து வரும் விபீஷணனைப் பார்த்து வர வேண்டும் போல் ஆசையாய் இருக்கிறது. இந்தப் பாலத்தின் வழியாக நான் போய்ப் பார்க்கலாமா?



என் பாரத்தை அது தாங்குமல்லவா? பாலம் என்பதாகப் போட்டால் அதன் மீது மற்றவர்கள் நடந்து கடந்து செல்லும்படி வலுவாக இருக்க வேண்டுமே!'' என்றார்.

அர்ஜுனன் இடியிடி என்று சிரித்தான். ''அதுதான் முன்பே சொன்னேனே, யானைப்படைகூட என் பாணங்களின் மேல் போகலாம் என்று. கிழ வானரரான உங்களொருவரைத்தானா அது தாங்காது? நல்ல சந்தேகம்! என்றோ ஆதியில் உங்களுக்கு இருந்த பலத்தைப் பற்றிய கர்வம் இன்னமும் போகவில்லை போலிருக்கிறது!'' என்றான்.

செருக்கில் தலைகனத்த அர்ஜுனன், அடக்கமே உருவான ஆஞ்ஜநேயரைப் பார்த்து இப்படிச் சொன்னான்!

''ஆமப்பா! நீ சொல்வதே சரி. நான் கேட்டது தப்புதான்'' என்று தழைந்து கூறிய ஹநுமான் ''ராமா'' என்று சொல்லியபடி அம்புப் பாலத்தின் மீது தம் முதலடியாகக் கட்டைவிரலை வைத்தார்.

அவ்வளவுதான்!

'தடால்' என்று அந்த விஸ்தாரமான பாலம் நொறுங்கிக் கடலில் அமிழ்ந்துவிட்டது!

அர்ஜுனனுக்கு அவமானம் தாளமுடியவில்லை. அவன் தலை தொங்கிவிட்டது.

இச்சமயம் பார்த்து, அரூபமாக எங்கும் எப்போதும் நிறைந்துள்ள ஸ்வாமி தமது அழகிய க்ருஷ்ண ஸ்வரூபத்தில் அங்கு தோன்றினார்!

''என்ன அர்ஜுனா? ஏன் இப்படி லோகமே பறி போனதுபோல் தலைகவிழ்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

கபட நாடகம் செய்வதில் ஸ்வாமிக்கு இணை ஸ்வாமிதான்! ஒன்றும் தெரியாதவர்போல் நடித்தார்.

அர்ஜுனன் வாய் திறக்கவே இல்லை. அத்தனை மானபங்க உணர்ச்சி!

இதுவும் போதாது என்று கருதிய கண்ணன் மாருதியை விசாரித்தார்.

அவர் அர்ஜுனனின் தலைகுனிவுக்கான காரணத்தைச் சொன்னார்.

உள்ளே குறும்புச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே பகவான் வெளியேயும் பெரிதாகப் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார். ''என்ன ஆஞ்ஜநேயா, உன் வார்த்தையை நான் நம்பிவிடுவேன் என்று எப்படி நினைத்தாய்? தேவரும் தேவேந்திரனும் கண்டு வியந்த வில் திறனும், புஜ பல பராக்கிரமும் கொண்ட என் அருமை அர்ஜுனன் அமைத்த அம்புப் பாலத்தில் தள்ளாட்டம் கண்ட வானரமான நீ, விரல் வைத்த மாத்திரத்தில் அது உடைந்துவிட்டது என்று கதைக்கிறாயே! இதை எவர்தான் நம்புவர்? அர்ஜுனன் வேறு எதனாலோதான் இப்படியிருக்கிறான்'' என்றார்.

எல்லையில்லாத சோகத்துடன் அர்ஜுனன், ''இல்லை கண்ணா! ஹநுமான் கூறியது நிஜம்தான்'' என்றான்.

பகவான் மீண்டும் பெரிதாகச் சிரித்தார். ''பெரியவரான மாருதி பொய் சொன்னார் என்று இருக்கக்கூடாது என்றே நீயும் அவர் சொன்னதற்குப் பக்கவாத்தியம் வாசிக்கிறாயா? இதை எப்படி நம்புவது? எதற்கும் ஸாக்ஷி இருக்க வேண்டும். அப்போதுதான் நம்ப முடியும். எங்கே, இப்போது என் கண் முன்னாலேயே நீ மறுபடி அம்புப்பாலம் போடு! இந்த வானரக் கிழவர் அதன் மேல் நடக்கட்டும்'' என்றார் பரமாத்மா.

ஸ்வாமி உருவமில்லாமலே அனைத்தையும் காணும் ஸர்வஸாக்ஷி. அப்படியிருக்க, இம்மாதிரி விஷம நாடகமாடினார்!

அர்ஜுனனுக்கு இப்போது ஒன்று தோன்றியது. 'முன்பு சற்றே கவனக் குறைவாக நான் அம்புப்பாலம் அமைத்திருக்கக்கூடும். அதனால்தான் அது முறிந்தது. இப்போது கூர்த்த கவனத்துடன் அமைப்பேன். என் சாமர்த்தியத்தைமட்டும் பூரணமாகக் காட்டிவிட்டால் இம்முறை ஆயிரம் ஹநுமான்கள் ஏறினாலும் பாலம் முறியாது. அவர் மானபங்கமடைந்து ஓடட்டும்' என்று எண்ணினான். அகம்பாவம் செய்யும் சேஷ்டை!

சரசரவென்று மீண்டும் சரமாரி பொழிந்து அதிசயப் பாலத்தை இரண்டாம் முறையும் அமைத்து விட்டான் அர்ஜுனன்.

ஆஞ்ஜநேயர் அதன்மேல் ஜாக்கிரதையாக விரல் நுனியை வைத்தார். இம்முறை பாலம் உடையவில்லை. அசையக்கூட இல்லை. முழுப் பாதத்தையும் வைத்தார். அப்போதும் தாங்கிக்கொண்டது. மெல்ல மெல்ல அதன் மீதே நடந்தார். இப்போதும் அம்புப் பாலம் உறுதியாக நின்றது. பிறகு வேகமாகவே நடந்து சென்றார். பாலம் அதையும் தாங்கிற்று.

அவர் அக்கரை அடையும் வரையில் வைத்த கண் வாங்காமல் மகிழ்ச்சியோடு அவரையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுனன் பிறகு பெருமிதத்

தோடு, ''கண்ணா! பார்த்தாயா என் சாதனையை?'' என்று எக்களித்துக் கூறியபடி தன் பக்கத்தில் பார்வையைத் திருப்பினான்.

கண்ணனை அங்கு காணவில்லை.

''எங்கே போனார்?'' என்று அர்ஜுனன் கண்களைச் சுழற்றும் போது அவன் அமைத்த அம்புப் பாலத்துக் கடியே ஒரு பெரிய உருவம் புரளுவது தெரிந்தது.

மறுநிமிஷம் அவ்வுருவம் கண்ணனாக ஆகி அர்ஜுனனுக்குப் பக்கத்தில் வந்து நின்றது.

கண்ணனின் முதுகுப்புறத்தைக் கண்ட அர்ஜுனன் துடிதுடித்து 'ஹா!' என்று அலறிவிட்டான்.

பகவானின் நீலப்பட்டுப் போன்ற முதுகு முழுதிலும் ஏராளமான அம்பு முனைகள் தைத்ததால் ஏற்பட்ட ரண காயங்கள் காணப்பட்டன! அவற்றி லிருந்து குருதி கசிந்து கொண்டிருந் தது!

அறிவாளியான அர்ஜுனனுக்கு உண்மை புரிந்துவிட்டது.

கண்ணனே பெருவடிவம்கொண்டு அம்புப் பாலத்தின் கீழிருந்து கொண்டு அதைத் தாங்கியிருக்கிறான்! ஆஞ்ச நேயர் நடந்தபோது இற்றுவிழ இருந்த அம்புகளின் முனைகள் அவரது திரு மேனியைக் குத்திக் குருதி வடியச்செய் திருக்கின்றன. அவன் அப்படித் தாங்கி யிராவிடில் இம்முறையும் பாலம் நொறுங்கித்தான் இருக்கும்!

'என் சாமர்த்தியம் எதுவும் இல்லை. எனக்கு இருப்பதெல்லாம் கர்வம்தான்! இந்தக் கர்வத்தையும் மன்னித்து அவன் தாங்கியதில்தான் அவன் சக்தியும் சாமர்த்தியமும் தெரிகின்றன. மன் னித்தே என் கர்வத்தை அழித்து அருளிவிட்டான்!'

கண்ணனின் கமலப் பாதங்களில் பணிந்தான் அர்ஜுனன். ''சகல ஜீவ ராசிகளின் சக்தியும் உனதே. கர்வமும் அகம்பாவமும் கொள்ள எவருக்குமே உரிமை இல்லை'' என்றான்.

லங்கையில் விபீஷணனைக் கண்ட பின் மாருதி வான மார்க்கமாகவே தாவி ஒரே எட்டில் ராம ஸேதுவுக்குத் திரும்பினார்.

''ஆஹா, இவ்வளவு சக்திமானா அத்தனை பணிவாக இருந்தார்? அற்ப னான நான் இவரிடம் எவ்வளவு மரி யாதைக் குறைவாக நடந்து கொண்டு விட்டேன்?' என்று பச்சாதாபம் கொண்ட அர்ஜுனன் அவரிடமும் மன மார மன்னிப்புக்கேட்டுப் பெற்றான்.

''அர்ஜுனா! எதிர்காலத்தில் கௌர வர்களோடு நீ யுத்தம் செய்ய வேண்டி வரும். அச்சமயத்தில் துணைபுரியுமாறு ஆஞ்ஜநேயரை வேண்டிக்கொள்'' என் றார் கிருஷ்ண பரமாத்மா.

அர்ஜுனன் மாருதியிடம், ''கௌர வருடன் நான் போர் புரிய நேரும் போது என் தரப்பில் தாங்களும் யுத் தம் புரிந்து அருள வேண்டும்'', என வேண்டினான்.

மாருதியோ, ''எனக்கேதப்பா சொந்தப் பலம்? ஆனால் எல்லாமறிந்த இக்கண்ணனின் தூண்டுதலில் நீ இவ் வாறு கேட்பதால் இணங்குவதாகச் சொல்கிறேன். ஆனால் ஒன்று. எந்த ராம நாமமே எனக்குச் சக்தி தரு கிறதோ அதற்குமுன் கௌரவப்படை தவிட்டுக்கும் சமானமாகாது. ராவணா தியரின் ராக்ஷஸப் படைதான் ராம நாம சக்திக்குக் கொஞ்சமேனும் ஈடு கொடுக்கக்கூடியது. எனவே துரியோத னின் அற்ப கௌரவ சைனியத்தை நான் ராம நாம பலத்துடன் நேரடி யாகப் போர் செய்து தாக்குவது,முயல் கூட்டத்தை எதிர்க்கச் சிங்கத்தைத் துணை கோருவது போன்றதே. இது தர்ம யுத்தமாகாது. ஆயினும் இந்தக் கிருஷ்ணமூர்த்தியின் வாக்குக்குக் கட் டுப்பட்டு ஒன்று செய்கிறேன். உன் தேர்க்கொடியில் நீ என் உருவத்தைப் பொறித்துக்கொள். அதன் மூலம் நான் வெறுமே யுத்தத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்'' என்றார்.

இதையே பெரிய பாக்கியமாகக் கரு திப் பிற்பாடு மஹாபாரதப் போரில் அர்ஜுனன் தன் தேர்க்கொடியில்ஆஞ்ஜ நேயரின் உருவத்தை அமைத்துக் கொண்டான்.

ராமராக இருந்தபோது எவரது காலடியில் ஆஞ்ஜநேயர் பணியாளாகக் கிடந்தாரோ, அதே ஆஞ்ஜநேயர் கொடியில் இடம் கொண்டு தேரின் உச்சியில் பறக்க, அவருடைய காலுக்குக் கீழே ராமரின் மறு அவதாரமான கண்ணன் தேரோட்டியாக அமர்ந்து அர்ஜுனனுக்கு ரத சாரத்தியம் செய் தார்!

அடங்காதவர்களைக் கர்வபங்கப்படுத் தும் இறைவன் அடங்கியவர்களுக்கு அடியிலேயே தானும் குடிகொள்கிறான்!

[ஆஞ்ஜநேயரைப் பற்றிய இன்னோர் அபூர்வக் கதை அடுத்த இதழில் மலரும்.]

மாமன்னர் கையில் பலே பாலு

வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்





பனிமூட்டமுள்ள சதுப்பு நிலத்து நடைபாதை வழியே மகேஷைப் பின் தொடர்ந்து போகிறார்கள் ரவியும் பாலுவும்.
மகேஷ் பாபு இந்தத் தீவைச் சுற்றிப் பார்த்தது போதும். நாம் பங்களாவுக்குத் திரும்புவோமே.
உங்கள் விருப்பம் அதுவானால் அப்படியே செய்வோம்.
உங்கள் மாமா உருவாக்கிய செயற்கை ஏரி இது. கடல் நீரை இங்கு இப்படித் தேக்கி, சில அபூர்வமான மீன்களின் சரணாலயமாக்கியுள்ளார் இதை.
அந்த ஏரியை அவர்கள் கடக்கும் போது....
ஐயோ! எத்தனை பயங்கரமான தோற்றம்!
காட்டுப் பூனை ஒன்று சீறியபடி பாலுமீது பாய முயலும் போது, பீதியடைந்த பாலு நிதானமிழந்து தடுமாறி...
பாலு...ஊ....
இந்தத் தீவு என்னை வெறுக்கிறது என்பதை நானும் இப்போதுதான் உணருகிறேன்
நீருக்குள் முங்கி முக்குளிக்கும் வேளையில் பாலு அவைகளைப் பார்த்தான்.
ஆண்டவா! இதென்ன? இவைகள் ஏன் என்னைத் துரத்துகின்றன?

தொடரும்

ராடார்

ராடார் என்ற கருவியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது செய்யும் அற்புதமான காரியங்களைப் பற்றியெல்லாம் தெரியுமா? கப்பல்களைத் துறைமுகங்களுக்கும், விமானங்களை விமான தளங்களுக்கும் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்க ராடார் உதவுகிறது. கனமான மூடுபனியிலும் சுச்சிதமாக விமானங்களைத் தரை இறங்கச் செய்ய ராடாரின் உதவி இன்றியமையாதது. விரோதிகளின் விமானங்களையும் ராக்கெட்டுகளையும் இனம் கண்டு எச்சரிக்கை செய்யவல்லது ராடார். சந்திரனுக்குப் பிரயாணம் செய்து திரும்பும் திறனும் ராடாருக்கு உண்டு.


இவ்வளவு சிறப்பான இந்தக் கருவி எப்படி வேலை செய்கிறதுஎன்று தெரிந்து கொள்ள வேண்டாமா? எதிரொலி பற்றித் தெரியுமல்லவா உங்களுக்கு? ஒலி அலைகள் ஒரு பொருளின் மீது மோதித் திரும்புவதினால் ஏற்படுவது எதிரொலி. இதே தத்துவத்தில் தான் ராடாரும் இயங்குகிறது.

மிக நுண்ணிய ரேடியோ சிற்றலைகள் சிறுசிறு வெடிகளாகக் காற்று மண்டலத்தில் அடுத்தடுத்து வெடித்து அனுப்பப்படுகின்றன. இந்த ரேடியோ அலைகள் உறுதியான ஏதாவது ஒரு பொருளைத் தாக்கும்போது, அது அதே வேகத்தில் திரும்பி — கிளம்பிய இடத்துக்கே— வருகிறது. ரேடியோ அலைகளின் வேகம் என்ன தெரியுமா? விநாடிக்கு 1,86,000 மைல்கள்! இதிலிருந்து ஒரு ரேடியோ அலை அனுப்பப்பட்டு அது பொருளில் மோதித் திரும்ப எவ்வளவு நேரமாகும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம். இப்படி ரேடியோ அலைகள் மோதித் திரும்புவதிலிருந்து அது மோதிய பொருள் எங்கே இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். இதை ராடார் மிகக்குறுகிய காலத்துக்குள் கணக்கிட்டுக் கூறி விடும். ராடார்க் கருவியின் ஏரியல் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும். நாலா திசைகளிலும் ரேடியோ அலைகளைச் செலுத்த வேண்டாமா? அதற்காக.

ஒரு கப்பலில் ராடார் கருவியின் ஏரியல் கொடிக் கம்பத்தின் உச்சியிலிருக்கும். இது சுழலும்போது ரேடியோ அலை வெடிப்புக்களை அனுப்பிக் கொண்டே இருக்கும். இந்த அலைகள் எதன் மீதாவது மோதுமானால் அது உடனே துள்ளியபடி திரும்பி விடும். கப்பலினுள்ளே இருக்கும் ராடார் கருவியில் திரும்பும் அலை வெடிப்புக்களின் தன்மையை ஒரு திசையில் நாம் காணலாம். இது டெலிவிஷன் திரை போன்றிருக்கும்.

ராடாரின் ஏரியல் கண்ணுக்குத் தெரியாத ரேடியோ அலைகளை ஒரு கலங்கரை விளக்கின் ஒளியைப்போல்அனுப்புகிறது. கொடி மரத்தில் உள்ள ராடார் ஏரியல் சுழன்றபடி இருப்பதால் கப்பலைச் சுற்றியுள்ள பிரதேசத்தை ராடாரின் திரையில் காணமுடியும். கப்பலைச் செலுத்தும் மாலுமி கனமான மூடுபனியிலும் இருளிலும்கூடத் தன் கலம் எங்குள்ளது என்பதைச் சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

○ ★ ○



மேலேயுள்ள படம்தான் 'ராடார்' கருவி. இது நம் நாட்டில் பூனாவிலுள்ள அணு ஆராய்ச்சி நிலையமான விக்ரம் எர்த் ஸ்டேஷனில் உள்ளது. இதுபோன்ற ராடார் கருவிகளை நம் நாட்டில் பல இடங்களில் நிறுவி இருக்கிறார்கள். ராடாரின் கணக்கிலடங்காத உபயோகங்களை நீங்கள் மேல் வகுப்புக்களில் விரிவாகப் படிப்பீர்கள்.



நிலா சிரித்தது

எஸ். சியாமளா

பானுவுக்குப் பத்து வயதுதான். ஆனால் மரணப் படுக்கையில் படுத்திருக்கும் தாய் அபிதாவிடம் பேசிக் கொண்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் வயது வந்த பெரிய பெண் போல்தோன்றியது. அந்த அறையில் சூழ்ந்துகொண்டிருந்த அக்கம்பக்கத்துப் பெண் மணிகள் வியப்படைந்தனர். 'அழாதேம்மா...என்னைப் பற்றிக் கவலைப் படாதேம்மா. நான் சமர்த்தாக இருப்பேனம்மா. தந்தி கொடுத்திருக்கிறோமே... அந்தப் பட்டணத்து மாமா வந்து விடுவார். அவர் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போவாரம்மா...போன வருஷம் வந்தபோதே சத்தியம் பண்ணிச் சொல்லி விட்டுப் போனாரே... நிச்சயமாக வந்து விடுவாரம்மா...அவர் நல்லவர். அவர் என்னை நன்றாக வளர்ப்பார்...நீ ....நிம்மதியாகக் கொஞ்ச நேரம் தூங்கம்மா. நீ அழுதால் எனக்கும் அழுகை வரும்'' என்று தாயின் கன்னங்களில் வழியும் கண்ணீரைத் தன் பிஞ்சு விரல்களால் துடைத்துவிட்டாள். அபிதாவின் கண்ணீர் ஆனந்தக் கண்ணீர் என்று கூறுவது போல அந்த வாடிய முகம் மலர்ந்து இலேசாக இதழ்களை விரித்துப் புன்னகை கோடிட்டது. அனைவரும் சின்னஞ்சிறு பெண் பானுவின் தைரியத்தையும், சமர்த்தையும் கண்டு தங்களுக்குள் புகழ்ந்து கொண்டனர். அந்தக் கிராமத்து மனிதர்கள் அனைவருமே அங்கு கூடியிருந்தனர். முற்றத்தில் ஆண்கள் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

வாசலில் குடியான ஜனங்கள் சளசளத்துக்கொண்டிருந்தனர். அபிதா அனைவரிடமும் கடைசியாக விடை பெறுவதுபோல் கண்களால் ஒவ்வொருவரையும் பார்த்தாள். எல்லோருடைய முகமும் கலங்கிக் கண்களில் நீர் தேங்கியிருந்தன. ஒரு சிலர் மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்தனர். அபிதாவின் பார்வை அருகில் அமர்ந்திருந்த மகளை ஆசையும் பாசமுமாகப் பார்த்தது. பானு தாயின் முகத்தோடு தன் முகத்தைப் பதித்து முத்தமிட்டாள்.

அதேசமயம் 'பாம் பாம்' என்ற ஒலி கேட்டது. அத்தனை பேரின் முகமும் மலர்ந்தது. பானு தாயின் கைகளைப் பற்றிக்கொண்டு, ''அம்மா...அம்மா... பட்டணத்து மாமா 'வந்து விட்டார். காரில் வரார்...சப்தம் கேட்கிறது...'' என்றாள்.

அபிதாவின் மயங்கிய விழிகள் விரிந்தன. அந்த வீட்டினருகில் வந்து நின்ற காரிலிருந்து வாகீசன் இறங்கினார்.

''டிரைவர்! அந்தத் தோப்பு பக்கமாகக் காரை நிறுத்திவிட்டுக் கவனித்துக் கொள்...'' என்றவர் குனிந்த தலையோடு மெதுவாக உள்ளே நுழைந்தார். கிராமத்துப் பட்டாமணியம் வரவேற்றார்.

''வாங்க ஐயா... வாங்க. சரியான சமயத்துக்கு வந்துட்டீங்க. அந்த அம்மா உங்களுக்காகவே எதிர் பார்த்து மூச்சைப்பிடிச்சிட்டிருக்காங்க'' என்றார். வாகீசன் தலையை அசைத்து விட்டு உள்ளே புகுந்தார். அனைவருடைய பார்வையும் அவரையே துளைத்தன. அவரோ ஆண்களைப் பார்த்து இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டார். பெண்கள் வழிவிட்டு ஒதுங்கிக் கொள்ள அவர், படுத்திருந்த அபிதாவின் அருகில் வந்து உட்கார்ந்து பரிவுடன் பார்த்தார்.

அபிதா அவரைக் கெஞ்சலாகப் பார்த்தாள். ''வந்துட்டீங்களா....அண்ணா! உங்களுக்குப் பெரிய பொறுப்பு...இதோ இந்தப் பானு உங்கள் குழந்தை.... பார்த்துக்கொள்கிறீர்களா...?''

பானுவின் இளங்கையை ஆதரவான கையில் வைத்துப் பிடித்தாள். அவள் எலும்புக் கை நடுங்கியது- வாகீசன் ஒரு

கையால் குழந்தை பானுவை அணைத்துக்கொண்டார். இன்னொரு கையால் அந்த மெலிந்த கையை ஆதரவாகத் தடவினார்.

''அபிதா! கவலையே படாதே. என்னைப்பற்றி உனக்குத் தெரியும். என் மனைவி சொர்ணம். பெயருக்கேற்ற மாதிரி தங்கமானவள். நானே புகழ்ந்தால் நன்றாக இருக்காது. பானு சமர்த்துப் பெண்... உண்மையைப் புரிந்து கொள்வாள். நன்றிக் கடனாக மட்டுமல்ல, நல்ல விதமாகவும் வளர்ப்பேன். உன் பெண்ணை வளர்ப்பதில் கஷ்டமே இருக்காது...'' என்றார் நிதானமாக.

''அண்ணா! குழந்தைக்குப் பணம் வேண்டாம். பகட்டு வேண்டாம். பண்பான குணம், பரிவான இதயம் வேண்டும். அவளைப் பேராசைக்காரியாக ஆக்கிவிடாதீர்கள். அவளை ஏழையாகவே வளர்க்க வேண்டும்...'' என்றாள், அபிதா திக்கித்திணறிய குரலில். அவள் அடிக்கடி இதழ்களை நாவால் நனைத்துக்கொண்டதைக் கவனித்த பானு சட்டென்று அருகிலிருந்த குவளையிலிருந்த பாலைச் சின்ன டம்ளரில் ஊற்றித் தாய்க்குப் புகட்டினாள். அவளும் சிரிப்புடன் மெதுவாக விழுங்க முயன்றாள்... ஆனால் இரண்டுவிழுங்குக்குப் பிறகு பால் இதழ்க்கடையில் வழிய ஆரம்பித்தது. கை துவண்டு சரிந்தது. மகளைப் பார்த்தபடியே, அந்த உயிர் பிரிந்தது.

அத்தனை நேரமும் தைரியமாக இருந்த சிறுமி பானு ''அம்மா... அம்மா... போயிட்டாயேம்மா .... அம்...மா...'' என்று ஓவென்று அலறித் தாயின் உடலில் புரண்டாள். அடுத்த விநாடி அந்த வீட்டில் அழுகை ஒலம் ஆரம்பித்தது.

வாசன் நீர் வழியும் கண்களோடு ஆண்கள் பகுதியில் வந்து அமர்ந்து கொண்டார். பெண்களின் கூக்குரல் பலவிதமாகத் தெருவையே அதிர வைத்தது.

''அம்..மா...டி போயிட்டியே...''

''அடியே அபி...தா. போகிற வயதா...?இத்தனை பேர் இருக்க... இங்கே உனக்கு இடமில்லையோ...!''

''குழந்தையைக் கதறவிட்டுப் போக உனக்கு எப்படியடி மனம் வந்தது...?''

இப்படி எல்லோரும் வாய்க்கு வந்தபடி இழுத்து இழுத்துத் தங்கள் துயரத்தைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் பானுவைக் கட்டிக் கொண்டு கதறினார்கள். சிறிது சிறிதாக அதற்கும் முடிவு வந்தது.

மேற்கொண்டு செய்ய வேண்டியதைச் செய்ய ஆரம்பித்தனர். அபிதாவின் உடலைக் குடம் குடமாகத் தண்ணீர்விட்டுக் கழுவினார்கள். அதற்கு இரண்டுமடங்காகக் கண்ணீரும் வழிந்தது. எல்லோரும் அபிதாவின் கருணை மனத்தை, அன்பு உள்ளத்தை, கொடை தர்மத்தை வாய் நிறையப் புகழ்ந்தார்கள். அத்தனையும் உண்மை என்பதற்குச் சாட்சியாக ஊரே அங்கு கூடிக் கதறியது. அபிதாவின் உடலை அலங்கரித்தார்கள். வாசலில் சட்டியில் நெருப்பு கனிந்து கொண்டிருந்தது. 'அம்மா... அம்மா' என்று புரண்டு அழும் குழந்தை பானுவைக் கர்ணத்தின் மனைவி ருக்மிணி தூக்கி அணைத்துக் கொண்டாள்.

அபிதாவின் இறுதி யாத்திரை தொடங்கிவிட்டது. வாசன் இடுப்பு வேஷ்டியின்மேல் துண்டைக் கட்டிக் கொண்டு முன்னால் கிளம்ப எல்லோரும் தொடர்ந்தனர். பெண்கள் அனைவரும் பானுவை அழைத்துக்கொண்டு குளத்துக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பினார்கள். அதற்குள் வேலைக்காரி துளசி வீட்டை நன்றாகக் கழுவி விட்டிருந்தாள். பட்டா மணியத்தின் வீட்டில் வாசனுக்கும் பானுவுக்கும் சாப்பாடு தயாராகிக் கொண்டிருந்தது.



பானு சோகமே உருவமாக உட்கார்ந்திருந்தாள். இரண்டு வருஷங்களுக்கு முன் தந்தையை இழந்தாள். அப்பா...! அவரை நினைக்கும் போது பானுவின் இதயம் பெருமிதத்தில் மலர்ந்தது. மகாதேவன் படித்துப் பட்டம் பெற்றவர். அவர் நினைத்திருந்தால், அவருடைய திறமைக்குச் சென்னையில் செல்வச் செழிப்பான வாழ்க்கையைப் பரிசாக அடைந்திருக்கலாம். ஆனால், தேசத்தின் உயிர்நாடி கிராமம் என்று வெறும் வாய்ச்சொல் வீரனாக இல்லாமல் கிராமத்திலேயே குடியேறி, அதை வளமாக்க உழைத்தார். எப்போதுமே நல்லவர்களுக்குத் தான் சோதனை அதிகம். மகாதேவனுக்கு நெஞ்சில் வலு இருந்த அளவுக்கு உடலில் இல்லை. பலஹீனம் அவரை நோய்ப் படுக்கையில்

தள்ளியது. பானுவுக்கு எட்டு வயது. அந்த இளம் அறிவுக்குள் தந்தை போதனைகளைத் திணித்தார்.


''பானு! எப்பவும் தைரியமாக இருக்கணும். எல்லோரிடமும் அன்பாக அடக்கமாகப் பழகணும். பொறுமைப் படக்கூடாது. நம்மை யாராவதுவெறுத் தால்கூட அவர்களை நேசித்தே வெட்க மடையச் செய்யவேண்டும். பதிலுக்கு வஞ்சகம் செய்யக்கூடாது. எப்பவும் சாந்தமாக இருக்கணும். பேராசைக்கு இடம் கொடுக்கக்கூடாது. திருப்தி என் பது வாழ்க்கையில் அமிர்தம்.'' இப்படி யெல்லாம் அடிக்கடி சொல்லி அணைத் துக்கொள்வார். பல வருஷங்கள் இருந்து குழந்தையை லட்சியவாதி யாக்க முடியாமல் தாம் போய் விடு வோம் என்ற எண்ணத்தில் குழந் தைக்கு அடிக்கடி போதனை செய்தார்.

பானுவுக்குப் பிரமாதமாக ஒன்றும் புரியாவிட்டாலும் அப்பா சொல்லுவது போல நடக்க வேண்டும் என்று மட்டும் உறுதியாகத் தீர்மானித்துக் கொண் டாள். ''அப்பா! நீ சொல்ற மாதிரி இருப்பேன். நல்லவளாக இருப்பேன்..'' என்று மழலைக் கொஞ்சலாகக் கூறித் தந்தையின் மார்பில் சாய்ந்து கொள் வாள். அவரும் எத்தனையோ கனவுகளை நெஞ்சில் சுமந்தபடி அபிதாவிடம் பானுவை விட்டுவிட்டுப் போய் விட் டார். இப்போது அபிதாவும் போய் விட்டாள். குழந்தை புத்திசாலி, பிழைத்துக்கொள்வாள். நம் துணை அவசியம் இல்லை என்ற எண்ணமோ..? அவர்கள் நம்பிக்கையை அஸ்திவார மாகக் கொண்டு பானுவின் வாழ்க்கைக் கட்டடம் அமைய வேண்டும்.

'பானு...' வாசுசேன் அன்புகுழையக் கூப்பிட்டபடி அருகில்வந்து அமர்ந்தார். அவள் கூந்தலைத் தடவினார். ''பானு! நாம்ப நாளைக்கு மெட்ராசுக்குக் கிளம் பணும். உன்னோட துணிகளைப் பெட்டி



எலியும்
எலிஃபண்டும்



யானை உருவத்தில் பெரியது. பலம் மிகக் கொண்டதும் யானை. யானை சாதாரணச் சுண்டெலியைக் கண்டால் பயப்படும். ஏன்? யானையின் பாதத்தைச் சுண்டெலி கடித்துக், குடைந்து தள்ளிவிடும். சுண்டெலி யானையின் பாதத்தைக் கடிப்பதை யானையினால் உணர முடியாது. பாதம் குடையப்பட்ட பின் ஏற்படும் ரத்தப்போக்கினால் யானை இறந்துவிடும். இதனால், யானை கட்டியிருக்கும் இடத்தில் எலிகள் வராமல் பாதுகாப்பாக இருப்பார்கள்.

o யானைக்கு முகரும் நரம்புகள் அதன் வாயில் உள்ளன. துதிக்கையில் அல்ல.

o யானை தன்னுடைய துதிக்கையால் அதிகபட்சம் ஒரு டன் எடையைத் தூக்கும். அதன் துதிக்கையில் 40,000 தசைநார்கள் இருக்கின்றன,

தொகுப்பு: **பொன்மலை பரிமளம்.**

யில் வைத்துக்கொள்ளம்மா. வீட்டில் இருக்கும் சாமான்களை ஸ்டோர் ரூமில் வைத்துப் பூட்டி விட்டு வீட்டை வாடகைக்கு விட்டுவிடும்படி பட்டாமணியம் மாமாவிடம் சொல்லப் போகிறேன். என்ன?''

''சரி மாமா. ஆனா... இந்த வீட்டிலே அப்பாவும் நானும் அம்மாவும் சண்டை ஏதுமில்லாம அன்பா ஆசையா பழகியிருக்கிறோம். அப்பாவும் அம்மாவும் செத்துப் போனப்பத்தான் இங்கே அழுகைக்குரல் கேட்டது. அதனாலே, யாருக்கும் குடியிருக்க விடவேண்டாம். அந்தப் பள்ளிக்கூடத்திலே இடமே போறலே. இந்த வீட்டைப் பள்ளிக்கூடமா வைச்சுக்கட்டுமே.''

வாகீசன் அயர்ந்து போய்விட்டார்.

பத்து வயதுச் சிறுமி பேசும் பேச்சா இது...,?

''குழந்தே! உன் அம்மா மாதிரி தான் நீயும் இருக்கிறாய். அவளோட ஆயுளையும் சேர்த்து நீ தீர்க்காயுசாக இருக்கவேண்டுமடி....கண்ணே...'' என்றவர் தம் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக்கொண்டார்.

வாகீசன் கிராமத்துப் பெரியவர்களைக் கலந்து பேசி எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்தார். பானு தன் தோழிகள் அனைவரிடமும் விடைபெற்றுக்கொள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் போய் வந்தாள். மறுநாள் காலை வாகீசனும் பானுவும் சென்னைக்குக் கிளம்பினார்கள். பானுவின் தோழிகள் அவளுக்கு எதை எதையோ தங்கள் அன்பளிப்பாகக் கொடுத்துக் காரின் பின்சீட்டையேயே நிரப்பிவிட்டார்கள். பானுவுக்கு அவர்களைப் பிரிந்து செல்ல மனம்இல்லை. ஆனாலும் வேறு வழியில்லை. போயிட்டு வரேன் என்று பலமுறை விடைபெற்றுக் காரில் ஏறி அமர்ந்தாள்.

''பானும்மா. இது உன்னோட ஊரு. உன்னோட வீடு இது. நாங்க எல்லோரும் உன்னோட மனுஷாளு. நீஅடிக்கடி வந்துக்கிட்டு இருக்கணும். நன்னா படிச்சு. நன்னா...நன்னா... வாழணும். தூக்கி வளர்த்த வேலைக்காரன் நெஞ்சையடைக்கக் கூறிக் கை நிறைய பழத்தையும் பூவையும் கொடுத்துத் தள்ளாடி நின்றான். ''வேலு...தாத்தா... வேலு தாத்தா...'' பானு ஹோ என்று அலறினாள். வாகீசன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு காரில்அமர்ந்தார். காரும் புறப்பட்டது. தெருவைக் கடந்து, குடிசைப் பகுதிகளைத் தாண்டிப் புழுதியைக் கிளப்பிவிட்டபடி, மேடு பள்ளங்களில் குலுங்கு குலுங்கிச்சென்று பஸ் ஓடும் சாலையில் திரும்பி மறையும் வரை அந்த ஜனங்கள் பொம்மைகளாக நின்றிருந்தனர்.

செங்கற்பட்டு சிங்கப்பெருமாள் கோயில் என்று ஒவ்வொரு ஊரையும் பின்னுக்குத் தள்ளியபடி அந்தக் கார் சென்னையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. தாம்பரத்தில் ஒரு ஹோட்டலுக்கு அருகில் காரை நிறுத்தச்சொன்ன வாகீசன், ''வாம்மா, பானு! டிபன், காப்பி சாப்பிடலாம்...'' என்று அழைத்தார்.

(தொடரும்)



கோடைகாலம்


கோடை காலம்
வெளியேதலை காட்டப்போனால்
வெயிலடிக்குது!— கோடை
வெயிலடிக்குது!
வீட்டுக்குள்ளே இருப்பதானால்
வியர்த்துக்கொட்டுது!—ரொம்ப
வியர்த்துக்கொட்டுது!

குடிக்கத்தண்ணீர் இன்றிலை
குளங்கள்வாடுது!—ஆறு
குளங்கள்வாடுது!
குடிப்பதற்குச் சொட்டுசொட்டாய்க்
குழாய் போடுது!—தாளம்
குழாய் போடுது!

குளிர்ந்தபானம் நுங்குஇளநீர்
குடிச்சாத்திருது!—தாகம்
குடிச்சாத்திருது!—
கோடை ஊட்டி நாடிப்போனால்
குளிர்ந்துவீசுது!—காற்று
குளிர்ந்துவீசுது!

வளர்ந்தபயிர் செடிகொடிகள்
வாடிப்போகுது!— உலர்ந்து
வாடிப்போகுது!—நாக்கு
வரண்டுபோகும் கோடைவந்தால்
ஆடிப்போகுது!—உலகம்
ஆடிப்போகுது!

—நெல்லை ஆ. கணபதி.



புரிந்து கொள்வோம்!

புரிந்து கொள்ளுவோம்!


குப்பை மேட்டில் வளர்ந்த போதும்
குண்டு மல்லிகை — மணம்
குளிர வைக்கும் நறு மணத்தைத்
தருவ தில்லையோ ?

மண்ணுக் குள்ளே புதைந் திருந்தும்
பொன்னின் துகள்கள் — பின்னர்
மதிப்பு மிக்க நகைக ளாகத்
திகழ்வ தில்லையோ ?

உப்பு நீரில் கிடந்த போதும்
சிப்பி இனங்கள் — அழகு
ஒளிரு கின்ற முத்துக் களைத்
தருவ தில்லையோ ?


எந்தச் சூழல் இருந்தபோதும்
சிறந்த மனிதர் — தங்கள்
இதயத் தாலே உயர்ந்து நிற்பர்
புரிந்து கொள்ளு வோம் !

—ரா. பொன்ராசன்,



என்னைக் கவர்ந்த விளம்பரம!

உங்கள் கையெழுத்து அழகாக இருந்தால் பிறர் அதை இமைக்காமல் பார்ப்பார்கள் — பாராட்டுவார்கள். நீங்கள் சுத்தமாக, பாங்காக உடை அணிந்திருந்தால் உங்களைப் பிறர் வியப்போடு, திருப்தியோடு பார்ப்பார்கள். புன்னகை செய்வார்கள். வீட்டின் முன்னால் உன் தங்கையோ, அக்காவோ அழகாகக் கோலம் போட்டிருந்தால் தெருவில் போவோர் சற்றே



தயங்கி நின்று அதை ரசித்து விட்டுத் தான் மேலே நடப்பார்கள். பிறர் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் செயல்கள், படைப்புக்கள் எல்லாமே கலையம்சம் கொண்டவைதான். 'கலை' என்பது ஒரு கட்டுப்பாட்டுக்குட்பட்டதல்ல. எதிலுமே கலையழகைக் காண முடியும்.

'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்று அன்றைக்குப் பாடியவர் இன்றைக்கு இருந்தால் 'ஆய கலைகள் அறுபது கோடி!' என்று பாடியிருப்பாரோ என்னவோ? அந்த அளவுக்கு மனிதனின் செயல் திறன் பெருகி விட்டது.

முன்பெல்லாம் பத்திரிகைகளில் கதை கட்டுரைகளுக்கான படங்கள் மட்டுமே கலையழகுடன் பார்ப்பவர்களை ஈர்த்தன. விளம்பரங்கள் சாதாரணமாகஇருக்கும். ஆனால் இன்று பாருங்கள்—தின, வார, மாத சஞ்சிகைகளில் வாசகர்களின் கவனத்தை முதலில் கவருவது கலையழகுடன் காட்சி தரும் வண்ண வண்ண விளம்பரங்கள் தான்.

உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களைப் பொதுமக்களின் நினைவில் பதிய வைத்து, அவர்களைக் கடை முன் நிறுத்தி மணிப்பர்சைத் திறந்து மனமுவந்து பொருள்களை வாங்கிச் செல்லும்படி செய்யும் திறமை இன்றைய விளம்பரங்களுக்கு இருக்கிறது. வாசகர்களின் கவனத்தைத் தம்பால் திருப்பும் சக்தி கொண்ட எத்தனையோ விளம்பரங்களை வரிசைப்படுத்திச் சொல்லலாம்.

'வெயிலுக்கும் மழைக்கும் ஈடு கொடுக்கும் எங்கள் வர்ணப் பூச்சு' என்பதை அறிவிக்கும் ஒரு பிரபல பெயிண்ட் நிறுவனம் 'காமலிஷ்' (Camel + Fish = (Camelish) என்ற வாசகத்தைப் போட்டு, பாதி ஒட்டகமும் பாதி மீனுமான ஓர் உருவத்தை வரைந்து நிறுத்துகிறது. முக்கிய சாலைத் திருப்பங்களில். இது போல் தரையில் தாவிக் குதிக்கும் கங்காருவையும் மரங்களில் தாவிஓடும் குரங்கையும் இணைத்து மங்காரு (Monkey + Kangaroo) என்ற புதிய பிராணியை விளம்பரப் படமாக




உபயோகித் திருக்கிருர்கள். இப்படி இன்னும் பல. உங்களுக்கெல்லாம் தெரியும், ஏர் இந்தியாவின் 'மகாராஜா' உலகப் புகழ் பெற்றவர் என்று. அவர் கூறும் விளம்பர வாசகங்களும் அதற்கான அமைப்பும் அந்த பாவமும் அபாரமானவை என்று ஒரு முகமான பாராட்டை உலகநாடுகள் பலவற்றிலும் பெற்றிருக்கின்றன.

இப்படி உற்பத்திப் பண்டங்களை விலையாக்க விளம்பர நிறுவனங்கள் கலையழகுடன் கூடிய எத்தனையோ விளம்பர 'லே—அவுட்'டுக்களைத் தயாரித்து வருகின்றன.

விளம்பரத்தில் கவர்ச்சியோடு கருத்தும் இருக்கவேண்டும். இத்தகைய சிறப்பு மிக்கதொரு விளம்பரம் சமீபத்தில் எல்லாரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

ஒரு பானம். அதைப் பருகிஞல் உடல் உறுதிப்படும். நல்ல வளர்ச்சியும் சுறுசுறுப்பும் உண்டாகும். இதை எப்படி உருவாக்கியிருக்கிறது அந்த நிறுவனம்? சமீபத்தில் எல்லாரது கவனத்தையும் கவர்ந்தவர் புரூஸ் லீ என்ற ஜப்பானிய நடிகர். கராத்தே,



குங்ஃபூ ஆகிய போர்க் கலைகளில் வல்லவர். 'எண்டர் தி டிராகன்' என்ற படத்தில் அவரது 'மார்ஷல் ஆர்ட்' எனப்படும் போர்த் திறனை யாராலும் மறக்க முடியாது. மக்களின் நினைவில் பதிந்துள்ள அந்த விஷயத்தைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறது அந்த நிறுவனம். அழகான குழந்தைகள் இருவரை ஜப்பானிய கராத்தே வீரர்களாக்கி, நிற்கவைத்து விளம்பரப்படுத்தியுள்ளது. அழகான விளம்பரம். 'நாமும் இதைக் குடித்தால் உடலை இரும்பாக்கும் வலிவு வருமோ!' என்று கிழவர்களையும் எண்ணத் தூண்டும் அமைப்பு. 'நம் குழந்தைகளும் இப்படி வலிவும் வனப்பும் உள்ளவர்



களாக வேண்டும்' என்று பெற்றோர்கள் மனத்திலே ஆசையைத் தூண்டிவிடும் கலையழகு மிக்க விளம்பரம்—நியூட்ரமுல் பானத்தினுடையது. எதற்காக அது உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தைப் பலமடங்கு வேகத்தில் நிறைவேற்றும் திறமை பெற்றதாக இருக்கிறது அவ்விளம்பரம்.

விளம்பரம் ஓர் அற்புதக் கலைதான். அதில் சந்தேகமே இல்லை. நீங்கள் கண்டு வியந்த, உங்களைக் கவர்ந்த விளம்பரம் ஒன்று இருக்கத்தான் செய்யும். அது என்ன? எந்த அம்சங்களில் சிறந்து விளங்குகின்றது என்பதைப் பத்து வரிகளுக்குமேல் போகாமல் ஒரு போஸ்ட் கார்டில் எழுதி ''என்னைக் கவர்ந்த விளம்பரம்'' ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் ரோடு சென்னை-600032 என்று விலாசமிட்டு அனுப்புங்கள்.

சிறந்த விளம்பர விமரிசனத்துக்குப் பரிசும் உண்டு என்பதைக் காதோடு சொல்லி வைக்கிறோம்!



சூர்யமூர்த்தியின் மந்திரக் கத்தி

தராஜா

"நல்ல வெயில் நேரம். பகல் பன்னிரண்டு மணி."

அந்த ஆல மரத்தடியில் கூட்டம் கூடியிருந்தது. வேறொன்றுமில்லை; அங்கே ஒருவன் இளநீர்க் கடை போட்டிருந்தான். யானைத்தலை போன்ற இளநீர்க் காய்கள் குவிக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சீவி விற்பனை செய்து கொண்டிருந்தான் இளநீர் வியாபாரி.

கூட்டம் பொறுமை இழக்கத் தொடங்கியது. காரணம் அவர்கள் விரும்பிய அளவுக்கு வேகமாக அவனால் இளநீர்க் காய்களை வெட்டித் தர முடியவில்லை. கூட்டத்தினர் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். சிலர் சலித்துப் போய் அங்கிருந்து நகரவும் முற்பட்டார்கள். "ஐயா, கொஞ்சம் இருங்கள்... இதோ... வெட்டித் தருகிறேன் காயை... கருப்பஞ்சாறு போன்ற இளநீரைப் பருகி மகிழ்ந்து விட்டுப் போங்கள்..." என்று வேண்டுகோள் விடுத்தான் வியாபாரி.

"நீ வெட்டுகிற வேகத்தைப் பார்த்தால் எங்களுக்கு இளநீர் கிடைப்பதற்குள் பொழுது சாய்ந்து விடும் போலிருக்கிறதே...!"

"நான் என்ன ஐயா பண்ணுவேன்? இந்த அரிவாள் கூர்மையாக இல்லையே? எத்தனை தரம் சாணை பிடித்தாலும் அடிக்கடி மழுங்கிப் போய் விடுகிறது! வேறு அரிவாளோ வெட்டுக்கத்தியோ வாங்க வேண்டுமானால் நான் பணத்துக்கு எங்கே போவேன்...? இந்த வியாபாரத்திலே கிடைக்கிற பணம் வயிற்றுப்பாட்டுக்கே சரியாகப் போய் விடுகிறது!" என்று குறைப்பட்டுக் கொண்டான் இளநீர் வியாபாரி.

சற்றுத் தள்ளி நின்றபடி இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார் ஒருவர்.

அவர் தம் பக்கத்தில் இருந்தவரிடம் "ஹூம்..! எல்லாக் கத்தியும் சூர்யமூர்த்தியின் கத்தி போல் இருக்குமா என்ன..? கத்தி என்றால் அது வல்லவா கத்தி..." என்று பெருமையாகச் சொன்னார்.

"சூர்யமூர்த்தியின் கத்தியா...? கேள்விப்பட்டதே இல்லையே..! அதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்...!" என்று கேட்டார் மற்றவர்.

"பக்கத்து ஊரில் இருக்கிறார் சூர்யமூர்த்தி என்பவர். மிகுந்த பக்திமான். தர்ம சிந்தையுள்ளவர். அவரிடம் ஒரு கத்தி இருக்கிறது. அவரது முன்னோர்களில் யாருக்கோ ஒருவருக்குச் சித்தர் ஒருவர் தமது மந்திர சக்தியால் வரவழைத்துக் கொடுத்த கத்தியாம் அது... தினமும் கத்திக்குப் பூஜை செய்து விட்டுத் தான் சூர்யமூர்த்தி சாப்பிடுவார்..."

"அப்படி என்ன விசேஷம் அந்தக் கத்தியிலே...?"

"அதுதான் சொன்னேனே — அது ஒரு மந்திரக் கத்தி. அதை உறையிலிருந்து எடுத்து வலது கையில் பிடித்து ஆணைகள் பிறப்பித்து விட்டால் போதும்; மளமளவென்று தானாகவே இயங்கி எல்லா வேலைகளையும் அது செய்து முடித்து விடும். ஒரு தோப்பிலுள்ள மரங்களை வெட்ட வேண்டுமா..? கணப் பொழுதில்



வெட்டிச் சாய்த்து விடும். இளநீரோ, பனங்காயோ சீவ வேண்டுமா...? கண்ணிமைப்பதற்குள் காரியம் நிறைவேறி விடும். அதே போல் மரத்தில் அழகான சிற்பங்களைச் செதுக்க வேண்டுமா...? மந்திரக் கத்தியிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும். இது மட்டுமல்ல, காட்டு வழியில் போய்க் கொண்டிருக்கும்போது கொள்ளைக்காரர்கள் வந்து வழி மறிக்கிறார்களா..? ஏவி விடுங்கள் இந்தக் கத்தியை.. அவர்களை விரட்டியடித்து விட்டு, உங்களிடமே மீண்டும் வந்து சேரும். அதைப் போன்ற கத்தியை நான் வேறு யாரிடமும் பார்த்ததில்லை...!''

இப்படி அவர் அந்த மந்திரக் கத்தியின் மகிமையை எடுத்துச் சொல்லுவதைப் பக்கத்தில் நின்றபடியே உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான் பெரியகருப்பன் என்ற பெயர் கொண்ட ஒரு பேர்வழி. பக்காத் திருடனை அவன் மனத்தில் அப்போதே ஒரு திட்டம் பிறந்தது. அன்றிரவே சூர்யமூர்த்தியின் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான் பெரியகருப்பன்.

மறுநாள் அதிகாலையில் சூர்யமூர்த்தி ஆற்றில் குளித்துவிட்டு வரும்போது அவரது காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிட்டான் பெரியகருப்பன்.

''யாரப்பா நீ...? எதற்காக என் காலில் வந்து விழுகிறாய்...?'' என்று கேட்டார் சூர்யமூர்த்தி.

''ஐயா! நான் பரம ஏழை, யாருமில்லாத அநாதை.. என்னை நீங்கள் தான் கைகொடுத்து ஆதரிக்க வேண்டும்...''

''சொல்லு, என்ன வேண்டும் உனக்கு...?''



''வேறொன்றும் வேண்டாம்... என்னைத் தங்களது ஊழியனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்...?''

''எனக்கு எதற்கு அப்பா ஊழியன்...? நானே கணக்குப் பிள்ளை ஊழியம் செய்து வருகிறவன். ஊழியனுக்கு ஓர் ஊழியனா...?''

''நீங்கள் என்னை மறுக்கக் கூடாது.. நானாக உங்களிடம் வரவில்லை... மூன்று நாட்களுக்கு முன்னால் சிவபெருமானே என் கனவில் தோன்றி,

'என் பக்தன் மந்திரக் கத்தி சூர்ய மூர்த்தியிடம் போய் ஊழியம் செய்' என்று கட்டளையிட்டு விட்டார். அதனால்தான் தங்களை நாடி வந்தேன்.''

சூர்யமூர்த்தி தெய்வ பக்தி மிக்கவர் அல்லவா...? பெரியகருப்பன் சொன்னதை அப்படியே நம்பிவிட்டார். 'சிவபெருமான் உண்மையிலேயே உன் கனவில் வந்தாரா...? அவர் எப்படித் தோற்றம் அளித்தார்..? என் விலாசம் கொடுத்தாரா என்ன..?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டால் அபசாரமாயிற்றே என்று கருதியவராக, பெரியகருப்பனைத் தமது ஊழியனாக ஏற்றுக் கொள்வதென்று உடனடியாக முடிவு செய்து விட்டார்.

பெரியகருப்பன் சூர்யமூர்த்திக்கு ஊழியம் புரிய ஆரம்பித்தான். அவரை நிழல் போலப் பின்தொடரத் தொடங்கினான். 'சூர்யமூர்த்தி எந்த நிமிடம் ஏமாறுவார், நாம் அந்த மந்திரக் கத்தியைத் தூக்கிக் கொண்டு ஓட்டம் பிடிக்கலாம்' என்பதிலேயே அவனது கவனம் இருந்தது.

நாட்கள் பறந்தன. ஆறு மாதங்கள் ஓடி விட்டன. பெரியகருப்பன் எதிர்பார்த்துக் காத்திருந்த சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது. தமது உறவினர் ஒருவர் இறந்து விட்டதால் தாம் வெளியூர் செல்வதாகவும், திரும்பி வரும் வரையில் வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியும் பெரியகருப்பனிடம் கூறி விட்டுப் புறப்பட்டுச் சென்றார் சூர்யமூர்த்தி.

அன்று இருட்டும் வரை காத்திருந்தான் பெரியகருப்பன். ஊர் அடங்கியதும் சூர்யமூர்த்தியின் பூஜை அறைக்குள் சென்று மந்திரக் கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். யாருக்கும் சந்தேகம் ஏற்படாதவாறு இரவோடு இரவாகத் தன் ஊருக்குச் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்கினான்.

பாதி வழி சென்றதும் களைப்பு மேலிட்டது. ஒரு மரத்தடியில் சற்று உட்கார்ந்தான், இளைப்பாறலாமென்று. காற்று மென்மையாக அவனது உடலைத் தழுவிக் கொண்டு சென்றது. நிலா வெளிச்சம் பால்போல் பரவி, இரவைப் பகலாக்கிக் காட்டியது.

பெரியகருப்பன் தலையை நிமிர்த்தி, மரத்தை அண்ணாந்து பார்த்தான். மரத்தின் உச்சாணிக் கிளையிலே மாம்பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. பெரியகருப்பனின் நாவில் நீர் ஊறியது. மாம்பழங்களைப் பறித்துத் தின்ன ஆசை பிறந்தது. இடுப்பில்தான் 'மந்திரக் கத்தி' இருந்ததே! அதை எடுத்தான். வலது கையில் அதைப் பிடித்துக் கொண்டு, ''மந்திரக் கத்தியே! நல்ல பழுத்த பழமாக நான்கைந்து மாம்பழங்களைப் பறித்துப் போடு..!'' என்று உத்தரவிட்டான்.

ஆனால், அவன் எதிர்பாராதது நடந்தது. அந்தக் கத்தி அவன் கையிலிருந்து புறப்பட்டு அந்தரத்தில் ஒரு விநாடி நின்றது. பிறகு பெரியகருப்பனின் மார்பைக் குறி பார்த்து நகரத் தொடங்கியது!

பெரியகருப்பனுக்கு உதறல் எடுத்தது. அங்கிருந்து ஓடத் தொடங்கினான். கத்தி அவனைத் துரத்த ஆரம்பித்தது. கண்மண் தெரியாமல் வயல் வரப்புகளிலெல்லாம் புகுந்து ஓடினான் பெரியகருப்பன். சில இடங்களில் இடறி விழுந்து அடியும் பட்டுக் கொண்டான். கத்தியோ அவனை விடுவதாக இல்லை. வேகம் வேகமாகத் துரத்தியது.

கிலி பிடித்து ஓடிய பெரியகருப்பன் வழியில் ஒரு பாழுங்கிணறு இருந்ததைக் கவனிக்கவில்லை. அதில் 'தொபுகடீர்' என்று விழுந்தான். நல்லவேளையாகக் கிணற்றில் தண்ணீர் இல்லாததால், மூழ்காமல் தப்பினான். அவனைத் துரத்தி வந்த மந்திரக் கத்தி அந்தப் பாழுங்கிணற்றுக்கு மேலே அப்படியே அசையாமல் நின்றது. 'மேலே ஏறி வா..: உன்னைப் பார்த்துக் கொன்கிறேன்' என்று அது பயமுறுத்துவது போலத் தோன்றியது பெரியகருப்பனுக்கு. இரவு முழுவதும் அந்தக் கிணற்றிலேயே விழுந்து கிடந்தான் - அவ்வப்போது 'ஐயா...! என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று தீனமாகக் குரல் எழுப்பியபடியே

பொழுது புலரும் தருணத்தில் பெரியகருப்பனுக்கு விடிவு காலமும் பிறந்தது. தன் கண்முன்னால் ஏதோ தொங்கி ஆடுவதைப் போலிருந்தது அவனுக்கு. உற்றுப் பார்த்ததில் அது ஒரு தாம்புக்கயிறு என்பது புலப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டான். மெள்ள மெள்ள மேலே ஏறி வந்தான். ஐந்தே நிமிஷங்களில் கிணற்றுக்கு வெளியேவந்து விட்டான்.

அப்போதுதான் அவன் இரண்டு விஷயங்களைக் கவனித்தான். அந்த மந்திரக் கத்தி கிணற்றுக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கவில்லை என்பது முதலாவது. இரண்டாவது

என்லவெளில் அவனுக்காகத் தாம்புக் கயிற்றை விட்டு அவனைக் காப் பாற்றியவர் சூர்யமூர்த்தியே என்பது!

''நீ எங்கேயப்பா இங்கே வந்தாய்..? வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டல்லவா நான் போனேன்...?'' என்று கேட் டார் சூரியமூர்த்தி.

பெரியகருப்பன் அவரது காலில் விழுந்தான். கதறியழுதான். தான் மந்திரக் கத்தியைத் திருடிக் கொண்டு வந்ததையும் அது தன்னை விரட்டிய தையும் சொன்னான். எல்லாவற்றை யும் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த சூர்யமூர்த்தி, 'போனால் போகட்டும்... நான் உன்னை மன்னித்து விட்டேன்... ஆனால், ஒன்று. நீ இந்த விஷயத்தை யாரிடமும் சொல் வதில்லை என்று வாக்குக் கொடு...!'' என்றார்


பெரியகருப்பன் திகைத்தான். வேறு யாரேனுமாக இருந்தால் இந்த விஷயத்தைத் தண்டோரா அல்லவா போடுவார்கள்...? இவர் இப்படிக் கேட்கிறாரே...?

சூர்யமூர்த்தி விளக்கினார்.


''வேறொன்றுமில்லை... நீ என்னிடம் வேலைக்குச் சேர்ந்தபோது என்ன சொன்னாய். அநாதை என்றாய், சிவபெருமானே உன் கனவில் தோன்றி என்னிடம் போகச் சொன்னதாகச் சொன்னாய் அல்லவா...? அப்படிப் பட்ட நீ இப்படியொரு காரியத் தைச் செய்திருக்கிறாய் என்றால் நானே முதல் அநாதை என்று சொல்லிக் கொண்டு வருகிற யாரிடமும் மக்களுக்கு இரக்கம் தோன்றாது; சந்தேகமே ஏற்படும். அதே போல் சிவபெருமானை உண்மை யிலேயே கனவில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் தங்கள் கனவை வெளியே சொன்னால் 'பெரிய கருப்பன் போல் இவரும் பித்தலாட் டம் செய்கிறார்' என்று அவநம்பிக்கை அல்லவா கொள்வார்கள்...? அதனால் தான்இந்த விஷயம்பற்றி மூச்சு விடாதே என்று உன்னைக் கேட்டுக் கொள் கிறேன்...''

சூர்யமூர்த்தியின் பெருந்தன்மை யும், நல்லெண்ணமும் பெரியகருப் பனின் மனத்தை நெகிழ வைத்தன. அன்று முதல் யோக்கியனாகப் பிழைப்பது என்ற முடிவுக்கு வந்தான்.

இந்தப் பழங்காலத்து ரயில் எஞ்சினுக்கு ஒரு விசேஷம் உண்டு. வரலாற்றுப் பெருமை கொண்டது இது. இந்தியாவில் ஓடிய முதல் நீராவி ரயில் எஞ்சின் இது. 1853ம் ஆண்டு ஏப்ரல் 16ந் தேதி பம்பாயிலிருந்து புறப்பட்டுக் கரும்புகையைக் கக்கியபடி தாணா வரை 37 கிலோ மீட்டர் தூரம் ஓடிய ரயில் வண்டியை இழுத்துச்சென்ற இந்த இஞ்சினின் பெயர் ஃபேரி க்வீன்.



ஜூலியஸ் ஸீஸர்



“மாவீரன் ஜூலியஸ் ஸீஸர் மன்னனாக முடிசூடிக் கொண்டால் பதவி போதையில் கொடுங்கோலனாக மாறி விடுவாரோ என்ற அச்சம் ஆலோசனைக்குழு அங்கத்தினர்களிடையே இருந்தது. ஸீஸரைத் தனது வைரியாக எண்ணி வெறுக்கும் காஷியஸ்



ஸீஸரைக் கொல்லத் திட்டம் வகுக்கிறான். நீண்ட யோசனைக்குப்பிறகு, ஸீஸரின் தோழனான புருடஸ் காஷியஸ் விரித்த வஞ்சக வலைக்குள் விழுகிறான். சர்வ வல்லமையும், அதிகாரமும் பெற்றுவிட்ட ஸீஸரிடம் ஒருவித பயமும் பொறாமையும் கொண்ட செனடர்களில் பலர் காஷியஸின் சதித்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கின்றனர்.

ஒருநாள் இரவு சதிகாரர்கள் புருடஸின் இல்லத்திலே ஆலோசனை நடத்தக் கூடுகின்றனர். பேச்சு வார்த்தைகளின் போது பலமுறை புருடஸ், காஷியஸின் ஏற்பாடுகளை ஏற்க மறுத்துப் பேசினான். ஸீஸரைக் கொல்ல வேண்டும் என்பதற்கு ரகசியத்தில் சத்தியப் பிரமாணம் செய்து தரவேண்டும் என்று காஷியஸ் வற்புறுத்தியபோது, 'ரோமானியனின் வார்த்தையே வாக்குறுதிப் பத்திரம் தான். சத்தியம் தேவையில்லை' என்றான். அதுமட்டுமல்ல. காஷியஸ் மார்க் ஆந்தனியையும் கொல்ல வேண்டும் என்று வற்புறுத்தியபோது, 'ஸீஸரின் நெருங்கிய நண்பன் என்பதற்காக ஆந்தனியைக் கொல்லுவது முறையல்ல,' என்று வாதாடினான் புருடஸ். 'ஸீஸரை அழிப்பதைக் கொலை என்ற கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. மக்களின் நல்வாழ்வுக்காகச் செய்யப்படும் ஒரு தியாகம்' என்றான்.

மறுநாள் ரோமானியர்களின் முக்கியக் கடவுளான ஜூபிடரின் கோயிலில் ஜூலியஸ் ஸீஸர் ரோம



சாம்ராஜ்யத்தின் மன்னராக முடி சூட்டிக் கொள்வதற்கு வரும்போது அவரைக் குத்திக் கொலை செய்வ தென்று ஒருமுகமாக முடிவாகிறது. அப்போது குடிகாரனான காஷியஸ் கேட்டான். ''ஸீஸர் நாளைக்கு வீட்டை விட்டு வராவிடில் என்ன செய்வது..? சகுனங்கள் சரியாக இல்லை என்று காபிடோலுக்கு (Capitol) — ஜூபி டரின் கோயில்) வராவிடில்? இப் போதெல்லாம் சகுனங்களில் ஸீஸர் அதிக நம்பிக்கை வைக்கிறார். அப்படி ஏதாவது ஏற்படுமானால் நம் திட்டம் பொடியாகிப் போகுமே...?''

காஷியஸின் இந்தப் பிரச்னை சதி காரர்களிடையே புதிய குழப்பத்தை ஏற்படுத்தியது. காரணம் ஸீஸர் சகுனங்களில் மிகுந்த ஈடுபாடுடைய வர். ஆனால், அவர்களிடையே ஒருவன் மிக்க நம்பிக்கையோடு பேசினான். அவன் ஸெனடர் டெஸியஸ். ''அந்தப் பொறுப்பை என்னிடம் விடுங்கள். சகுனத்தடை ஏதும் ஏற் படுமானால் தக்கபடி ஸீஸரிடம் பேசி அவர் மனத்தை மாற்றித் திட்டமிட்ட படி காபிடோலுக்கு ஸீஸரை அழைத்து வருவது என் வேலை..'' என்றான் டெஸியஸ். சதிகாரர்கள் முடிவாக விடைபெற்றுப் பிரியும் போது, அதிகாலைப் பொழுதாகி விட்டது.

வீடு திரும்பிய புருடஸுக்கு அமைதி யில்லை. தெளிவு பிறக்கவில்லை. உயிர்த் தோழன் ஸீஸருக்குத் தான் துரோக மிழைக்கிறோமோ என்று குழம்பினான்.



தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைதானே இது என்று சமாதான மும் செய்து கொண்டான். தான் செய்வது சரியா.. தவறா...? எவ்வித முடிவுக்கும் வரமுடியாமல் அல்ல லுற்றான். அவன் மனைவியும் அன்றிரவு தூங்கவில்லை. அவள் வெளியே வந்த போது அமைதியற்ற நிலையில் உலாவும் கணவனைக் கண்டாள். அவனிடம் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்தைப் பார்த்துக் கலங்கினாள். அவனது மகிழ்ச்சியின்மைக்கான காரணத் தைக் கேட்டாள். வெகு நேரம் தட்டிக் கழித்த புருடஸ் முடிவில் தன் மனைவியிடம், அவளால் எவ்வித உதவியும் செய்ய முடியாதென்பதை அறிந்தும், உண்மை நிலையைக் கூறினான்.



அன்று இரவு ரோமாபுரியில் இதே போலப் பலர் அமைதியாக உறங்க வில்லை. அவர்களுள் ஸீஸரும் ஒருவர். பொழுது புலரும் தறுவாயில் சகுனம் பார்த்து வருமாறு மதகுருக்களை அனுப்பினார் ஸீஸர். அவர்களுடைய வருகைக்காகக் காத்திருக்கும் போது ஸீஸரின் மனைவி கல்பூர்னியா அப் போது கணவனைத் தேடி வந்தாள். அன்றிரவு அவள் ஒரு கெட்ட கனவு கண்டிருந்தாள், ஸீஸர் கொலை செய் யப்படுவது போல். தன் கனவைக் கணவனிடம் கூறி அன்று முழுதும் அவர் வீட்டை விட்டு வெளியே போக வேண்டாமென்று வற்புறுத் தினாள் கல்பூர்னியா.

மனைவியின் வேண்டுகோளையும் பீதியையும் முதலில் ஸீஸர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ''எதை எதையோ கற்பனை செய்துகொண்டு படுத்திருப்பாய் அதனால் வந்த கனவு அது'' என்றார். ஆனால் மதக்குருக்களிடமிருந்து பணியாளர்கள் கொண்டு வந்த செய்தியைக் கேட்டபிறகு, மனைவி கல்பூர்னியாவின் வேண்டுகோளை முழு மனத்துடன் ஏற்றுக்கொண்டார். மதகுருமார் அனுப்பிய செய்தி என்ன..? 'சகுனங்கள் சாதகமாக இல்லை. முடிசூட்டிக் கொள்ளக் கோயிலுக்குப் போக வேண்டாம். அரண்மனையிலேயே' இருக்கவும்'' என்பதே அவர்கள் அனுப்பிய செய்தி.



டெஸியஸ் ஸீஸரை அழைத்துப் போக வந்தபோது, ''என்னுடைய நல்வாழ்த்துக்களை ஸெனடர்களுக்குத் தெரிவி. இன்று நான் காபிடோலுக்கு வரப் போவதில்லை என்பதையும் அவர்களிடம் சொல்லு'' என்றார் ஸீஸர்.

''அவருக்கு உடல் நலமில்லை என்று கூறு'' என்றாள் கல்பூர்னியா.

''வேண்டாம். உண்மையில்லாத ஒரு செய்தியை என்னால் அனுப்ப முடியாது'' என்றார் ஸீஸர்.

''ஸீஸர் அவர்களே! தாங்கள் வரமுடியாததற்கான காரணத்தைக் கூறாவிடில், ஸெனடர்கள் கேலியாகச் சிரிப்பார்கள்'' என்றான் டெஸியஸ்.

''காரணம்? — நான் ஒரு முடிவு எடுத்தால் அதற்குக் காரணமும் வேண்டுமா என்ன...? இருந்தாலும் சொல்கிறேன். நேற்றிரவு என் மனைவி ஒரு கெட்ட கனவு கண்டாள். என் சிலையிலிருந்து அருவிபோல் ரத்தம் பீறிட்டு அடித்ததாம். ரோமானியர்கள் அதில் தங்கள் கைகளை முக்கிக் கொண்டார்களாம். ரொம்பக் கெட்ட சகுனம். ஆகவே கல்பூர்னியா இன்று நான் வீட்டிலேயே தங்க வேண்டுமென்கிறாள். அவள் மட்டுமல்ல, மதகுருமார்களும் இப்படியே அபிப்பிராயப் படுகிறார்கள்'' என்றார் ஸீஸர்.


டெஸியஸ், அவருடைய முடிவை ஏற்கவில்லை. ஸெனடர்களுக்குத் தான்



எப்படியும் ஸீஸரை ஆலயத்துக்கு அழைத்து வருவதாக வாக்களித்தவனாயிற்றே அவன். தன் திறமையையெல்லாம் காட்டலானான். அவர் மனைவி கண்ட கனவு நல்ல சகுனத்தையே தெரிவிப்பதாகச் சமத்காரமாகக் கூறினான். ''ரோம சாம்ராஜ்யத்துக்கு நீங்கள் புது வாழ்வும், புதிய ரத்தமும் அளிக்கப் போகிறீர்கள் என்றல்லவா அந்தக் கனவு கூறுகிறது'' என்றான்.



இந்தப் புதிய விளக்கம் ஸீஸருக்குத் திருப்தியளிப்பதாக இருந்தது. மாவீரனானாலும்கூட, ஒரு பெண்ணின் கனவினால் பீதியடையவும், இச்சகம் பேசும் மோசக்காரனின் புகழ்ச்சியில் மயங்கவுமே செய்தார் ஸீஸர். இதுவே விதியின் செயல். பீதியைப் புகழ்ச்சி வென்று கொண்டு விட்டது. உடனே தன்னுடைய மேலங்கியைக் கொண்டுவருமாறு தம் பணியாளர்களுக்குக் கட்டளையிட்டார். திட்டமிட்டபடி டெஸியஸுடன், ஜுபிடரின் கோயிலுக்குக் கிளம்பத் தயாராகி விட்டார். அந்த வேளையில் —



புகழ்ச்சியின் போதையிலுள்ள அப்போது-சகுனங்களின் நல்லது, கெட்டது பற்றிச் சிந்திக்கும் நிலையில் இல்லை ஸீஸர்.

விசுவாசமுள்ள ஒரு ரோமானியன். அவன் பெயர் **ஆர்டிமிடோரஸ்**. மன்னர் ஸீஸரைக் கொல்லச்சதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிகிறான் அவன். ஸீஸரை எச்சரிக்க சதிகாரர்களின் திட்டங்களை விளக்கி எழுதப்பட்ட ஒரு கடிதத்துடன் கோயிலின் நுழைவாயில் படிகளில் காத்திருக்கிறான். ஸீஸர் வருகிறார். அவரிடம் தனது ஓலைச் சுருளை நீட்டுகிறான் ஆர்டிமிடோரஸ். ஆனால், விதி விளையாடுகிறது. ஸீஸர் அதை ஏற்கவோ, படிக்கவோ மறுத்து மேலே போய் விடுகிறார்.

ஆர்டிமிடோரஸ் அப்புறப்படுத்தது பட்டான். ஜுபிடர் ஆலயத்தினுள் தமது இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார் ஸீஸர். அன்றைப் அலுவல்களைத் தொடங்கலானார். முதலில் மெட்டலஸ் என்பவன் முன் வந்து ஸீஸர்முன் மண்டியிட்டு, ரோமாபுரியிலிருந்து நாடு கடத்தப் பட்டுள்ள தன் சகோதரனை மன்னித்து அழைக்குமாறு வேண்டிக் கொள்கிறான். ''வடக்கே ஒளிரும் நட்சத்திரத்தைப் போல் நான் உறுதியானவன். உன் வேண்டுகோளை ஏற்பதற்கில்லை''





இனிக்குது கோகுலம்
இருக்குது ஆப்பிளும்
உனக்கெது வேண்டினும்
எனக்கினி கோகுலம் கோகுலமே!

வண்ணப்படம்: வித்யாவ்ரதா


என்கிறார். இதே சமயத்தில் சதிகாரர்களில் ஒருவனான காஸ்கா ஸீஸருடைய இருக்கையின் பின்னால் வந்து நின்று கொள்ளுகிறான். திட்டமிட்டபடி ஸீஸரின் உடலில் முதல் கத்தியைப் பாய்ச்ச வேண்டியவன் அவன் சட்டென்று தனது உடைவாளை உருவி ஸீஸரின் முதுகில் பாய்ச்சுகிறான் காஸ்கா.

அடுத்தடுத்துக் குத்துவாள்கள் வேக வேகமாக மாவீரன் ஸீஸரின் உடலில் பதிகின்றன. படுகாயமடைந்த ஸீஸர் அதிர்ச்சியினால் மூச்சுத் திணற, சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த புருடஸைப் பார்க்கிறார். தன்னுடைய நண்பனான அவன் தன்னை இந்தக் கொடியவர்களிடமிருந்து காப்பாற்றுவான் என்ற எண்ணத்தில், கைகளை விரித்த நிலையில், ஸீஸர் அவனை நோக்கித் தள்ளாடியபடி முன்னேறுகிறார் உதவி வேண்டி. ஆனால், புருடஸோ தமது இடையிலிருந்த குத்துவாளை உருவி ஸீஸரின் இதயத்திலே ஆழப் பாய்ச்சுகிறான். விழிகள் பிதுங்க "நீயுமா புருடஸ்...?" என்ற அலறலுடன் தரையிலே சாய்கிறார் ஸீஸர். அவர் ஆவி பிரிகிறது. யாரையெல்லாம் நண்பர்கள் என்று கருதினாரோ அவர்களாலேயே — மிகமிக நெருக்கமானவனான 'புருடஸ்' உட்பட— கொல்லப் படுகிறார் மாவீரன் ஸீஸர்.

இந்தப் பயங்கரமான செயலுக்குப் பிறகு அங்கே ஒரு நீண்ட மௌனம் நிலவியது. அதைத் தொடர்ந்து வெறி கொண்ட குரல்கள் கோஷத்தைக் கிளப்பின. 'சுதந்திரம், விடுதலை! கொடுங்கோலன் இறந்தான்!' செனடர்களில் பலர் பீதி கொண்டு ஓடலானார்கள். மற்றையோர் மகத்தானவராக விளங்கிய மாவீரர் ஸீஸர் இறந்தார் என்று கூவியபடி வீதிகளில் ஓடினார்கள்.

புருடஸ் மட்டும் அமைதியாக நின்று கொண்டிருந்தான். விடுதலை பெற்றதற்கு அடையாளமாக ஸீஸரின் ரத்தத்தில் கைகளைக் கழுவிக் கொள்ளுவதென்று சபதம் ஏற்றிருந்தனர் சதிகாரர்கள். அதன் படியே அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது அங்கு தோன்றினான் மார்க் ஆந்தனி. குருதி வழிய விழுந்து கிடக்கும் மாவீரன் ஸீஸரையும் அவரது ரத்தத்தில் தங்கள் கைகளை நனைத்துக் கொள்ளும் சதிகாரர்களையும் கண்ட ஆந்தனி அதிர்ச்சி அடைகிறான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)




செய்து பாருங்கள்!


"பட் படார்...!"



தீபாவளியின் போதுதான் பட்டாசு வெடிக்க வேண்டுமா..? இதோ இந்தப் 'பட் படார்' பட்டாசை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம். காசுபணம் செலவில்லை. கரியாகவும் போகாது. ஆபத்தில்லாத பட்டாசு. இந்தப் பட்டாசைச் செய்ய வேண்டியதெல்லாம் போன வருஷம் எழுதிப் பழசான நாற்பது பக்க நோட்டின் அட்டை (கெட்டிக் காகிதத்தினால் ஆனது) கணக்கு நோட்டில் மீதமுள்ள ஒரு வெள்ளைத்தாள். இவ்வளவுதான்.


1. நோட்டுப் புத்தக அட்டை (நீண்ட சதுரமாகியது)யைச் சரிபாதியாக இருமுனையும் சேருமாறு மடியுங்கள். மடித்தானது இருமுனையையும் இணைத்து ஒட்டி விடுங்கள். 2. பசை காய்ந்ததும் பக்கத்து முனையை அதன் எதிர்ப் பக்கமாகக் கொண்டு போய் (படத்தில் காட்டியபடி) மடியுங்கள். 3. மடிபட்ட இடத்தை அழுத்தித் தேய்த்து, மீதி நீட்டிக் கொண்டுள்ள பகுதியை வெட்டி எறியுங்கள். 4. இப்போது கிடைத்த முக்கோணப் பகுதியை வெள்ளைத் தாள் மீது வைத்து 'டிரேஸ்' செய்து... 5. அதை அப்படியே கத்தரித்துக் கொள்ளுங்கள். அப்படிக் கத்தரித்து எடுத்துக் கொண்ட முக்கோணத் துண்டைப் படத்தில் காட்டியுள்ளபடி இரண்டாக மடியுங்கள். 6. இனி இரண்டாக மடித்து, முக்கோண வடிவிலுள்ள நோட்டுப் புத்தக அட்டையைப் பிரித்து மேஜை மீது வையுங்கள். வெள்ளைக் காகித முக்கோணத் துண்டைப் பிரியுங்கள். அதன் நடு மடிப்பு, சதுர அட்டையின் நடுமடிப்பில் ஒரு முனையோடு பொருந்துமாறு வைத்து, அதன் இரு பக்கங்களையும், அப்பாவிடமுள்ள 'செலோ டேப்'பினால்' படத்தில் காட்டியுள்ளபடி இணைத்து அழுத்தி ஒட்டி விடுங்கள்.






7. இப்போது சதுர அட்டையை மறுபடியும் அதன் மடிப்பின் ஊடாக—வெள்ளைக் காகிதம் உள்ளிருக்குமாறு மடியுங்கள். வெள்ளைக் காகிதம் இணைத்துள்ள பக்கத்துக்கு எதிர் முனையைக் கையில் பிடித்துக் கொண்டு கையை உயர்த்தி வேகமாக உதறுங்கள். 'படார்' என்று வெடிச் சத்தம் எழும். வெள்ளைக் காகிதம் வெளியில் வந்திருக்கும். மடிப்பைப் பிரித்து மறுபடியும் வெள்ளைக் காகிதத்தை உள்ளே மடக்கி மறுபடியும் முன்போல் ஒரு சொடுக்கு. 'பட் படார்..!' பட்டாசு வெடித்துக் கொண்டே இருக்கலாம்.

— வாண்டு.







இறகுகள்



கண்ணன் அந்த நீலக்குருவியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கையில் திறந்த பேனா. முன்னால் விரித்த நோட்டுப் புத்தகம். அருகில் கணக்குப்புத்தகம் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. கீச்....கீச்...என்று சிவந்த வாயை மூடாமல் கத்திக் கொண்டிருந்தது அந்த நீலக் குருவிக்குஞ்சு. தாய்க்குருவி, அவன் அம்மா அரிசியிலிருந்து எடுத்துப்போட்ட நெல்மணிகளைக் கொத்திக் கொண்டிருந்தது. அது வருமளவும் பொறுமையில்லை அந்தக் குஞ்சுக்கு. 'தன்னைப் போலவே அந்தக் குஞ்சும் அதன் அம்மாவுக்கு ஒரே குழந்தை போலும். பாவம் பசிக்குது... அதான் ஒரேயடியாக் கத்துது.' கண்ணனின் மனத்தில் நினைவுகள் பலவாறாக ஓடின.

தான் செய்யும் வேலையையும்விட்டுவிட்டு எதை இப்படி உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று வியந்தபடியே சண்பகம்—கண்ணனின் தாய்—''என்ன கண்ணா?...என்ன பாத்துட்டிருக்கே?...ஹோம் வொர்க் செய்யலையா நீ'' என்று கேட்டபடியே அருகில் வந்தமர்ந்தாள்.

''இல்லேம்மா...பாவம் அந்தக் குருவிக்குஞ்சு எப்படிக் கத்துது பார்த்தீங்களா? பாவமாயில்லே! அந்த அம்மாக் குருவியானும் சீக்கிரம் அதுக்குத்தீனி குடுக்கக்கூடாதா? பாவம் அதுக்குப் பறக்க முடிந்தால் இப்படிக் கூட்டுக்குள்ளிருந்து கத்திக் கொண்டிருக்குமா?''

கண்ணனின் பேச்சைக் கேட்ட அவன் தாய் சிரித்துக்கொண்டு, ''இல்லேடா கண்ணா! குஞ்சுங்கன்னாலே பசிச்சாலும் பசிக்கலேன்னாலும் கத்திக்கிட்டேஇருக்கும். சின்னக் குழந்தைங்க எப்பவும் அம்மா தூக்கி வச்சுக்கிட்டே இருக்கணும்னு தொந்தரவு குடுக்குதில்லையா, அதுபோலதான்! சரி நீ 'ஹோம் வொர்க்'கெல்லாம் சீக்கிரமாப் பண்ணி முடி. சாப்பிட நேரமாச்சல்லே! நாளான்னிக்கு ''ரம்ஜான்'' பண்டிகையில்லே! உன் வாத்தியார் காதர் ஸார் வீட்டுத் துணிகளெல்லாம் தச்சு முடிச்சு நாளைக்குக் கொடுத்தாகணும்'' என்று கூறினாள்.

வேலை செய்து காய்ந்துப் போயிருந்த தன் தாயின் கரங்களை வருடிய வண்ணம் ''பாருங்கம்மா, அந்தக் குருவிக்குஞ்சுக்கு இறக்கை முளைத்துப் பறக்கும் வரை தானே தாய்க் குருவிக்குத் தொல்லை குடுக்க முடியும். என்னாலே வாழ்நாளெல்லாம் உங்களுக்குத் தொல்லைதானேம்மா?'' என்று கண்ணன் சொன்னான். இதைக் கேட்ட தாய் கண் கலங்கியபடி, ''ஏய்... கண்ணா...! என்னடா பெரிய பேச்செல்லாம் பேசக் கத்துக்கிட்டிருக்கே. யாருக்கும் யாராலேயும் தொந்தரவு கிடையாது. நீ பேசாம பாடத்தைப் படிச்சு முடிச்சுட்டுச் சாப்பிட வா'' என்று சொல்லிவிட்டு எழுந்தவள், மகன் பார்க்காதவாறு கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.


கண்ணன் அருகிலிருந்த பள்ளியில் நாலாவது படித்துக் கொண்டிருந்தான். கண்ணனுக்குப் பிறவியிலேயே இரண்டு கால்களும் சூம்பிப்போய் வலுவில்லாமல் போய்விட்டன. சிறு வயதிலேயே தந்தையும் இறந்து விட்டார். பாவம் கண்ணனின் அம்மா தன்னால் முடிந்த அளவில் அவனுக்கு வைத்திய சிகிச்சைகள் செய்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. இதனாலெல்லாம் அவன் தாய் மனமொடிந்துவிடாமல், மகனுக்குப் ''படிப்பு'' என்ற கால்களையாவது கொடுத்தே தீர வேண்டும் என்ற உறுதியுடன் செயல்பட்டாள். அவளும் சிறு கம்பெனி ஒன்றில் 'பேக்கிங் செக்ஷனி''ல் வேலை செய்வது தவிர தன் கணவன்—கண்ணனின் தந்தை— உபயோகித்து வந்த தையல் மெஷினின் உதவியுடன் அருகிலிருந்தவர்களுக்குத்

துணிகளும் தைத்துக் கொடுத்தாள். வகுப்பில் முதல் மாணவனுகப் படித்து வந்தான். கண்ணன் ஆனுலும் மனத்தில் ஒரு தாழ்வு மனப்பான்மை.

தட்டில் தாய் போட்ட விளாம்பழத் துவையலை ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்த கண்ணனிடம், ''கண்ணு! எங்கற கம்பெனி முதலாளி 'லயன்ஸ் கிளப்' மூலமாக உனக்குச் சக்கர நாற்காலி கிடைக்க உதவி செய்வார்னு அன்னிக்குச் சொன்னேனில்லே. இன்னும் இரண்டு வாரத்திலே கிடைச்சுடும். அப்புறம் உனக்குக் கவலையே இல்லே'' என்று கண்ணனின் தாய் மகிழ்ச்சியுடன் சொன்னுள். ''அப்படியா அம்மா! பாவம் நீங்கதான் எனக்காக எவ்வளவு கஷ்டப்படுறீங்க'' என்று தழுதழுத்தகுரலில் கண்ணன் கூறவும், அவன் தாய் கண்ணனை அணைத்துக்கொண்டு, ''இதிலென்ன கஷ்டமப்பா! நாளைக்கு நீ படிச்சுப் பெரிய நிலைக்கு வந்ததும் நான் தானே அந்த மகிழ்ச்சியையெல்லாம், இரட்டிப்பாக அனுபவிக்கப் போறேன்'' என்ருள்.

இப்போதெல்லாம் கண்ணன் சக்கர நாற்காலியின் உதவியுடன்தான் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். அன்று பள்ளி ஆண்டுவிழா. கண்ணனுக்கு நிறையப் பரிசுகள் இருந்தன. பரிசுகளையெல்லாம் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து சென்றே கண்ணன் பெற்றுக்கொண்டான். விழாவைத் தலைமை தாங்க வந்தவரும், ஆசிரியரும் கண்ணனைப் புகழ்ந்து பேசினுர்கள்.

ஆனுல் ஒரு சில பொறாமை பிடித்த மாணவர்கள், ''அவனுக்கு என்ன கிடைத்து என்னடா? பாவம் கால் இல்லாமல் இந்தச் சக்கர நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு எத்தனை தூரம் தான் இவ்வளவு பெரிய உலகத்தில் முன்னுக்கு வர முடியும்? இதிலே ஏழை வேறு'' என்று அவன் காது படவே பேசியதைக் கேட்டதும் மனம் நொந்து போனுன்.



கடிகாரத்தை பார்க்காத மேதை

○ உலகமே கண்டு வியக்கும்படி பல அற்புதங்களைச் செய்து காட்டிய மாபெரும் விஞ்ஞானி தாமஸ் ஆலவா எடிஸன் (1847–1931). அவர் கண்டு பிடித்து அரசாங்கத்தில் பதிவு செய்தது 2,500 கருவிகள்.

ஒரு நண்பர் அவரைப் பார்த்து ''உங்களால் எப்படி இவ்வளவு வெற்றி பெற முடிந்தது...?'' என்றார். ''கடிகாரத்தைப் பார்க்காமலே இருந்ததால எடிஸன் கூறினார்.

எடிஸனுக்கு நேரமே தெரியாதாம். உணவு நேரம், ஓய்வு நேரம் எதுவுமே அவருக்குத் தெரியாது. அவருக்குத் தெரிந்ததெல்லாம் ஆராய்ச்சி நேரம் ஒன்றுதான்.

கோ. ச. பலராமன்

வீட்டிற்குத் திரும்பி வரும்போதுகூட அம்மா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவனால் ஒழுங்காகப் பதில் சொல்ல முடியவில்லை. வீட்டிற்கு வந்த பிறகும் கூட மௌனமாக அமர்ந்திருந்தான். விர்ரென்று சப்தம் கேட்கவே, திரும்பிப் பார்த்த கண்ணனுக்கு ஒரே சந்தோஷம். ''ஹையா!...அம்மா...அந்தக் குருவிக் குஞ்சு பறக்குது. அதுக்குச் சிறகெல்லாம் மொளச்சிடுச்சு! வந்து பாரேன்'' என்று கத்தினான். பிறகு கவலையுடன், ''பாரும்மா, அது கூடப் பறக்க ஆரம்பிச்சிடுச்சு. நான்தான் இப்படி'' என்று மன வருத்தப்பட்டுக் கூறியவன், பள்ளியில் மாணவர்கள் சொன்னதைத் தாயிடம் சொல்லி அழ ஆரம்பித்துவிட்டான். இதைக் கண்ட கண்ணனின் தாய் கலக்கமடைந்தாலும் மகனின் முன்னால் தன் வருத்தத்தைக் காண்பிக்காமல், ''சே...சே...! என்னடா கண்ணா இது? இதுக்குப் போய் அழுவாங்களா? சொன்னா சொல்லிக்கிட்டுப் போறாங்க. இந்தக் குருவிக் குஞ்சுகூடப் பறக்க முடியாமக் கூட்டிலே இருந்து கத்திக்கிட்டிருந்தப்போ பக்கத்து வீட்டுப் பாட்டி, 'இது ஏன் இப்படிக் கத்தி மாயுது! சனியன்'ன்னு எத்தனை தடவை திட்டுவாங்க? இன்னிக்கு இது பறந்து இரை கொத்தும்போது பாட்டியே வந்து கொஞ்சம் கோதுமை போட்டாங்க. அதுக்கு, சிறகு முளைச்சுப் பறக்கத் தொடங்கினது போலவே, நீயும் பெரிய படிப்பெல்லாம் படிச்சு முன்னுக்கு வந்துட்டா, இப்பக் கேலி பேசறவங்க, ''பாரு அந்தப் பையன் உடம்பிலே ஊனமிருந்தாலும் உள்ளத்தையும் ஊனம் பண்ணிக்காம, எப்படி 'அறிவு'ங்கற சிறகாலே இந்த ஒலகத்துலே பறக்கறான்'னு மெச்சிக்குவாங்க. நிச்சயமா நீ அப்படிப் பறக்கத்தான் போறே. நான் உனக்கு ''ஹெலன் கெல்லர்'' என்ற அம்மாவைப் பத்திக் கதை சொல்லியிருக்கேனில்லே! கண் தெரியாத அந்த அம்மையார், எப்படி உலகத்துக்கே தன் பெயர் தெரிகிற மாதிரி தன் வாழ்வை அமைச்சுக்கிட்கிட்டாங்க. யார் என்ன பேசினாலும் மனம் தளரக்கூடாது. 'படிப்பு''ங்கற பலமான இறகுகளை உனக்கு நான் தர, என்ன கஷ்டப்பட்டாலும் சரின்'னு உறுதியா யிருக்கேன்! கடவுளும் துணை செய்வார். பின்னே, படிக்கணும், முன்னுக்கு வரணும்ங்கற கவலைதான் உனக்கு இருக்கணுமே தவிர வேற எதைப் பத்தியும் நீ கவலையே படக்கூடாது. அம்மாவையும் கவலைப்பட வைக்கக்கூடாது'' என்று மகனின் தலையை அன்புடன் தடவியவாறே கூறினாள். பின், ''சரி...சரி... காப்பி குடிச்சு, தோசையைச் சாப்பிடு. இன்னிக்கு எல்லா முதல பரிசையும் நீதானே வாங்கியிருக்கே. அந்த சந்தோஷத்தைக் கொண்டாட நான் ஒரு புதுவித ''இனிப்புப் பலகாரம் செய்யப் போறேன்'' என்று சொல்லி விட்டு, பலகாரம் செய்யப் போனாள்.

அம்மாவின் பேச்சைக் கேட்டதும் கண்ணனின் மனக்குழப்பம் ஒருவாறு நீங்கியது. 'நெஜம்தானே...! யாரும் என்னவும் சொல்லட்டும்! அம்மா நமக்காக இவ்வளவு கஷ்டப்படும் போது, அதையெல்லாம் சொல்லி அவங்களுக்கு மன வருத்தத்தைக் கொடுத்திட்டோமே! நாம்ப இன்னும் நல்லா படிச்சு, பரிசுகள் நிறையநிறைய வாங்கி அம்மாவை சந்தோஷப்படுத்தணும். அம்மாவோட உதவியாலே நமக்குக் கிடைக்கப்போகும் 'கல்வி' என்கிற சிறகாலே உலகமெல்லாம் கற்றிப் பறக்கணும்' மனத்தில் இவ்வாறு நினைத்தபடியே தூங்கிப் போன கண்ணனுக்குத் தானும் குருவிக் குஞ்சும் வானத்தில் பறப்பது போன்ற கனவு. 'கல்வியறிவு' என்ற தன் பெரியசிறகுகளை அடித்துப் பறந்த கண்ணனுக்கு, கால்களின் ஊனம் பற்றிய வருத்தமே இல்லை. தூக்கத்தில் கண்ணன் சிரிப்பதைப் பார்த்த தாய், மன நிம்மதியுடன் போர்வையைச் சரியாக அவன் மேல் போர்த்திவிட்டாள்.



பாபு: அரோரா கம்பெனி வேலையைத் தான் வேண்டாம்னு விட்டுத் தொலைச்சியே. என் அங்கேயே மறுபடிபோய் வேலை தேடறே?

கோபு: எதையும் தொலைத்த இடத்தில் தானே தேடணும்!

-லலிதாசெல்லப்பா

எஜமான்: ஏண்டா, தோட்டத்திலே ஆடு டான்னு ஓட்டாமே டான்ஸ் ஆடிக்கிட்டிருக்கிறயே?

முனியன்: நீங்கதானே எஜமான் தோட்டத்திலே 'ஆடு' உடனே போன்னு சொன்னீங்க.

-என். முரளி



ரம்பம் ஜாக்கிரதை!

படம்: ஜீஜு—

நண்பர்: புதிதாகக் கார் வாங்கி இருக்கிறீர்களாமே?

பிரமுகர்: ஆமாம், யார் சொன்னது?

நண்பர்: ஆஸ்பத்திரியில் நாலைந்து பேர் சொன்னார்கள்.


உ. ஸ்ரீனிவாசன்



''காலேஜ் புத்தகமெல்லாம் வாங்கித் தரலேன்னு சாப்பிடாமல், தூங்காமல் இருந்தானே உன் பிள்ளை, இப்போ வாங்கிக் கொடுத்ததும் என்ன செய்கிறான்?''

''நன்றாகச் சாப்பிடுகிறான், நிம்மதியாகத் தூங்குகிறான்!''

ஆர். ஜீ. அசோகன்



தாத்தா: (பாட்டியிடம்) சிறிது நேரத்துக்கு முன்பு உன்னைப் பார்க்க உன் 'பாய் பிரண்ட்ஸ்' வந்திருந்தார்களே?

பாட்டி: என்ன உளறுகிறீர்கள்? எனக்குப் பாய் பிரண்ட்ஸ் யாரும் இல்லையே!

தாத்தா: உன் சிநேகிதிகள் அனிதாபாய், ராதாபாய், கஸ்தூரிபாய், கிருஷ்ணபாய் இவர்களைத்தான் சொன்னேன்.

-முகமது இஸ்மாயில்



பெண்மணி: தூக்கத்தில் என் கணவர் ஏதேதோ பேசுகிறார் டாக்டர்

டாக்டர்: நிறுத்தி விட்டால் போச்சு!

பெண்மணி: நிறுத்த வேண்டாங்க. தெளிவாகப் புரியும்படி, பேசுவதற்கு ஏதாவது மருந்து கொடுங்க'


— எஸ். சந்திரசேகர்.



தெரியுமா? தெரியுமே!

2839.	துருவக் காடுகளை ஈட்டியால் வேட்டையாடுவோர் யார்?	எஸ்கிமோக்கள்
2840.	ஒரு பசுமாடு தன் கொட்டிலில் இருந்த விளக்கைக் காலால் உதைத்து உருட்டியதினால் ஒரு நகரமே எரிந்து சாம்பலாயிற்று. அது எந்த நகரம் தெரியுமா?	அமெரிக்காவிலுள்ள அந்நாளைய சிகாகோ நகரம்.
2841.	சிங்காதனத்தை இழப்பதற்கு ஆங்கிலத்தில்—அஸாஸினேஷன், அப்டிகேஷன், சக்ஸஷன், காரனேஷன்—இவற்றில் எது சரி?	அப்டிகேஷன்
2842.	வெனிஸூலா என்ற நாடு எங்குள்ளது? அதன் தலைநகர் எது?	தென்அமெரிக்காவில். தலைநகர் காரகாஸ்.
2843.	வெனிஸூலாவின் முக்கிய ஏற்றுமதிப்பொருள் என்ன?	பெட்ரோல் எண்ணெய்.
2844.	மார்க் ட்வைன்—என்ற புனை பெயருக்குள் ஒளிந்து கொண்டிருப்பவரின் நிஜப்பெயர் என்ன?	சாமுவேல் லாங் ஹார்ன் க்ளமென்ஸ்.
2845.	இமயமலை ஏற்றத்துக்கு உதவி புரியும் ஷெர்ப்பாக்கள் பயன்படுத்துவது லாமா, யாக், எருமை, குதிரை இவற்றில் எது சரி?	யாக்
2846.	ஜெருசலேத்தில் உள்ள பெரிய கோயிலைக் கட்டியது யார்?	சாலமன் மன்னர்
2847.	இன்றைய இஸ்ரேலின் அன்றையப் பெயர் என்ன?	பாலஸ்தீனம்
2848	உலகிலேயே மிகப் பழமையான நகரம் என்று மேலைநாட்டவர் கருதுவது எந்நகரை?	இஸ்ரேலில் உள்ள ஜெரிகோ நகரை.
2849.	உலகிலேயே கடல் மட்டத்துக்கு மிகக் கீழாக உள்ள நகரம் எது? எங்குள்ளது?	இஸ்ரேலில் உள்ள ஜெரிகோ நகரம். கடல் மட்டத்துக்கு 1000 அடிகள் கீழுள்ளது.
2850.	மரணக் கடலில் (Dead Sea) சங்கமமாகும் நதியின் பெயர் தெரியுமா?	ஜோர்டான் நதி
2851.	யுர்ட் (Yurt) என்னும் வீட்டில் வசிப்பவர்கள் யார்?	மங்கோலியர்கள்
2852.	ஆதோபி (Adobe) என்பது என்ன?	சுடப்படாத ஆனால் சூரியவெப்பத்தினால் கெட்டியாக்கப்பட்ட செங்கல். அமெரிக்காவில் வாழ்ந்த பூர்விகக் குடிகள் பயன்படுத்திய செங்கல் இது.
2853.	பீவர் என்ற பிராணியை ஏற்றுமதி செய்ய எந்த நாடு வற்புறுத்தப்படுகிறது?	ஸ்வீடன்
2854.	அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து—இவற்றில் எந்த நாட்டில் பீவர் என்ற பிராணியே கிடையாது?	இங்கிலாந்தில்
2855.	மாரிக்காலத்துக்குத் தங்கள் உணவை பீவர் எங்கு சேமித்து வைத்துக் கொள்ளும்?	நீருக்கு அடியில்

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS-600032



பிரில்®
இங்க்
உங்கள் எழுத்துக்கு
அழகு ஊட்டுகிறது.
Bril
தயாரிப்பாளர்:
இண்டஸ்டிரியல் ரிஸர்ச்
கார்ப்போரேஷன்
சென்னை 600 041 பெங்களூர் 560 055

REGISTERED No. M 9040